# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 02 புதன்கிழமை (18-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:258


# தேசிய ஐக்கிய முன்னணி இரண்டாகப் பிளவுண்டது!

## சிஹல உறுமய ஆதரிக்கும்

கொழும்பு,ஒக்.18

இன்று இடம்பெறும் நாடாளுமன்றத்தின் புதிய அமர்வின்போது கொண்டுவரப்படவுள்ள அவசர காலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான அரசின் பிரேரணையை தமது கட்சி ஆதரிக்கும் என்று சிஹல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைக் கூறினார்.

யுத்தத்தை அரசாங்கம் நடத்தும்

(10ஆம் பக்கம் பார்க்க)



## பேரியல் அணி சந்திரிகாவுக்கு நிபந்தனையின்றி முழு ஆதரவு

கொழும்பு,ஒக்ரோபர்18

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதில் உண்டான கருத்துவேற்றுமை, பிணக்குக் காரணமாக -**

**தேசிய ஐக்கிய முன்னணி (N.U.F.) இரண்டாகப் பிளவுண்டது!**

**அவற்றில் ஒன்றான பேரியல் அஷ்ரப் தலைமையிலான அணி, புதிய அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நிபந்தனை எதுவும் இன்றி முழு ஆதரவு வழங்கவுள்ளது.**

**மேற்படி அணி நேற்று விடுத்த அறிக்கையில், புதிய அரசு அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதற்குக் கைமாறாக அமைச்சர் பதவி, எம்.பி. பதவி, வேறு பதவிகள் வழங்கவேண்டும் என்று நிபந்தனை எதுவும் விதிக்கப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனித்துப் புதிய அரசாங்கத்தை அமைக்க முடியாதவாறு தேர்தல் முடிவுகள் அமைந்ததும் அதனைத் தொடர்ந்து தேசிய ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய இரண்டு கட்சிகளின் ஆதரவுடனும் கூட்டரசாங்கமொன்றை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் தெரிந்ததே.

தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு ஜனாதிபதி சந்திரிகாவை பல தடவைகள் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

ஹக்கீம் பல நிபந்தனைகளை முன்வைத்து அவற்றை நிறைவேற்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## எழுத்து மூலமான உடன்படிக்கை குறித்து போட்டிக் குழு வலியுறுத்து

கொழும்பு,ஒக்.18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்க வேண்டுமானால் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் போட்டிக் குழு தெரிவித்துள்ளது.

அந்த முன்னணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான ஹக்கீம் தலைமையிலான குழுவே இப்படிக் கூறியுள்ளது.

தமது கட்சியின் தலைவரான அமைச்சர் அஷ்ரப் கடந்த தடவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு கொடுக்க முன் வந்தபோது எழுத்து மூலமான உடன்படிக்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.18

பலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் கண்டித்து ஜே.வி.பி. அமைப்பினர் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பலஸ்தீன மக்களைப் பாதுகாக்குமாறு கோரும் மகஜர் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (இ-8)

## அரசு அமைக்கும் சாத்தியம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஆராய்கிறது

### ரவூப் ஹக்கீமை ரணில் இரு தடவைகள் சந்தித்தார்

கொழும்பு,ஒக்.18

அரசு அமைப்பதற்கான ஏற்பாடுகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தீவிரமாகச் செயற்பட்டு வரும் அதேவேளையில் -

ஐ.தே.கட்சியும் அதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் எழுந்த முரண்பாட்டால் பிளவுண்ட தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீமுடன் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இரு தடவைகள் பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் அவரது வீட்டுக்குச் சென்ற ரணில் ஒரு மணி நேரம் கலந்துரையாடியதாகவும் தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## 5 தமிழ் இளைஞர் வவுனியாவில் கைது

வவுனியா,ஒக்.18

வவுனியா - பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 5 தமிழ் இளைஞர்கள் நேற்றுக் காலை நாசகாரத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நாராயணன் சந்திரசேகர், ஆறுமுகம் யோகராஜ், இராமையா இராஜ்குமார், யோசவ் ஜோண், ஈ.தவக்குமார் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் வவுனியாவிலுள்ள நாசகாரப் பிரிவுப் பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஜோசப்புக்கு எதிரான ஹர்த்தால் மட்டக்களப்பில் நேற்றுத் தோல்வி

மட்டக்களப்பு,ஒக்.18

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மட்டக்களப்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தால் தோல்வியில் முடிந்தது.

பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்த போதிலும், பாடசாலைகள் உட்பட சகல அரச திணைக்களங்களும் வழமைபோல் இயங்கின.

உள்ளூர், வெளியூர் பஸ் சேவைகளும் வழமைபோல் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

'தமிழர் உரிமைக்குரல் எதிரொலி' என்ற அமைப்பு மேற்படி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

மட்டக்களப்பில் ஊழல் நிறைந்ததாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. ஜோசப் பரராஜசிங்கம் நீதியான முறையில் எம்பியாகத் தெரிவுசெய்யப்படவில்லை

(10ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவுக்கு சபாநாயகர் பதவி?

கொழும்பு,ஒக்.18

நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தம்பியுமான அனுரா பண்டாரநாயக்க தெரிவாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கவின் செயற்குழு நேற்றுக் கூடிய சமயம் அனுராவை சபாநாயகர் பதவிக்கு நிறுத்துவதென முடிவு செய்திருந்தது.

இவருக்குப் போட்டியாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் ஒருவரை நிறுத்த மாட்டாது என்று நம்பகமாகத் தெரியவந்தது.



பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஒருவரை நிறுத்தினாலும், அந்த முன்னணியின் பெரும்பான்மையானவர்கள் அனுராவையே ஆதரித்து வாக்களிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7)

## 11 ஆவது நாடாளுமன்றம் இன்று பிற்பகல் கூடுகிறது

கொழும்பு,ஒக்.18

பதினொராவது நாடாளுமன்றம் இன்று சம்பிரதாயபூர்வமாக சுபநேரமான பிற்பகல் 2.30 மணிக்கு கூடவிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிப்பிரமாணம், சபாநாயகர், உப - சபாநாயகர், சபைமுதல்வர் பதவிகளுக்கான தேர்தல் இடம்பெற்ற பின்னர் -

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையைச் சமர்ப்பிப்பார்.

அதன் மீதான விவாதம் இடம்பெறும். (இ-3-8)

## அமைச்சரவை குறித்து இன்னும் முடிவு இல்லை

### சனிக்கிழமையே பதவி ஏற்கலாம்

கொழும்பு,ஒக்.18

நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து அமைச்சரவை அமைக்க ஜனாதிபதியும், முன்னைய அரசில் அங்கம் வகித்த சிரேஷ்ட அமைச்சர்களும் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்தும் முயற்சி மேற்கொண்டபோதும் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய நாடாளுமன்றத்தின் அமர்வு இன்று பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் அதே சமயம் -

அமைச்சரவைப் பதவியேற்பு வைபவம் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் இந்தப் பதவியேற்பு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் கோரிக்கைகள் மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் கோரிக்கைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாகவே அமைச்சரவைப் பதவியேற்பு தாமதமாவதாகத் தெரிவிக்கப்பட்டது.(இ-3)

## பொ.ஐ.முவின் தேசியப் பட்டியலில் கதிர்காமர், அலவி மௌலானா

### பெருமாளுக்கு இடம் இல்லை

கொழும்பு,ஒக்.18

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் முன்னாள் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, விஜேபால மெண்டிஸ் ஆகியோருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாளின் பெயர் நேற்று வெளியான பட்டியலில் இடம்பெறவில்லை. இவரின் பெயர் தேசியப் பட்டியலில் இடம்பெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகும் 29 உறுப்பினர்களின் விவரங்களை தேர்தல் ஆணையாளர் நேற்று மாலை உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

அந்தப் பட்டியல் விவரம் வருமாறு:-

**பொ. ஐ. முன்னணி**

லக்ஷ்மன் கதிர்காமர், அலவி மௌலானா, றோனி டி மெல், விஜேபால மெண்டிஸ், பட்டி வீரக்கோன், உதுமாலெப்பை மொஹமட் ஹனிபா, பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன, ராஜா கொலுரே, காந்தன் மாரிமுத்து, மேர்வின் சில்வா, சோமவீர சந்திர

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மூவரைப் பலி கொண்ட விபத்து

# லொறி உரிமையாளர் மற்றும் சாரதி ஆகியோரின் பிணை விண்ணப்பம் நீதிமன்றால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் மூவரைப் பலிகொண்ட லொறி விபத்து தொடர்பாக பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த லொறி உரிமையாளர், அதன் சாரதி ஆகியோரின் பிணை விண்ணப்பம் நேற்று யாழ்.நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் இந்த விவகாரம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரி நீதிமன்றில் இவர்களின் சார்பில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரினதும் பிரேத பரிசோதனை அறிக்கை சட்ட வைத்திய அதிகாரியினால் சமர்ப்பிக்கப்படாமையினால் மரணம் தொடர்பான தீர்ப்பு வழங்க முடியாது உள்ளதாக நீதிவான் தெரிவித்தார்.

இதனால் இந்தப் பிணை மனுவை நிராகரித்த நீதிவான் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை இவர்களைத் தடுப்புக் காவலில் வைத்திருக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை விபத்துக்குள்ளான லொறியை ஓட்டிச் சென்றது தொடர்பாக நீதிமன்றில் ஆள் மாறாட்டம் செய்ததாகக் குற்றம் சாட்டி லொறி உரிமையாளரான மொபீனுக்கு எதிராக பொலீஸாரினால் நீதிமன்றில் நேற்று மேலும் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சம்பவ தினம் இரவு 8 மணியளவில் சம்பவ இடத்தில் காணப்பட்ட லொறி உரிமையாளர் மொபீனிடம் விபத்துக்குள்ளான லொறியைப் பாதுகாக்குமாறு தான் கூறியதாக யாழ்.பொலீஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி நீதிமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-5)

---

**மந்திகை கண்ணகை அம்மன் ஆலய**

**ஏக தின இலட்சார்ச்சனை**

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவமும் ஏகதின இலட்சார்ச்சனையும் ***இன்று (18.10.2000) புதன்கிழமை*** நடைபெறும்.

*மந்திகை* (C/13443) **ஆலய தர்மகர்த்தா**

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2000**

**யா/முத்துத்தம்பி ம.வி.மாணவி**

**செல்வி கவிஷனா**

142 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளமையையிட்டு மாணவியையும் அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்

திரு.த.நடனகுமார், மனைவி வசீறேகா

Three Star Club

(79601) திருநெல்வேலி.

---

## வாழ்த்துகின்றோம்

**யா/சரசாலை ஸ்ரீகணேசவித்தியாலயம்**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ~ 2000**

சரவணபவன் பிவிஸ்னா - 142

பேரம்பலம் சஜீவன் - 137

(79596) **பழைய மாணவர் சங்கம்**

---

## வாழ்த்துகின்றோம்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு

முதலாம் இடத்தைப் பெற்ற

**செல்வி சிவராஜா விஜிதா**

இரண்டாம் இடத்தைப் பெற்ற

**செல்வி செல்வராஜா வனிதா**

நான்காம் இடத்தைப் பெற்ற

**செல்வன் சின்னத்தம்பி மதனன்**

ஆகிய எமது மாணவர்களையும், அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியை திருமதி பாக்கியலட்சுமி கனகரத்தினம அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

(C/13440) யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

---

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

***28.10.2000 சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு (புதிய நேரம்)***

இல.165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள எமது கழகப் பணிமனையில் எமது கழகத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதால் சகல பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

*இல.165, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/13439)

---

## யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை

**ஆண்டு 6 அனுமதி - 2001**

மேற்படி கல்லூரியில் தரம் - 6 இல் மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30.10.2000**

(79594) - அதிபர்

---

*யாழ்ப்பாணப்*
*பல்கலைக்கழகம்*
*இலங்கை*

***உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி***

மேற்படிக் கற்கை நெறிக்கு முதலாம் வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், இரண்டாம் வருடத்திற்கு மீள் பதிவினை மேற்கொண்ட மாணவர்களுக்குமான விரிவுரைகள் ***23.10.2000 அன்று காலை 8.30 மணிக்கு*** உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி அலகில் ஆரம்பமாகும். தவறாது விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
17.10.2000

(c/13438)

---

**ராஜா**
**(யாழ்ப்பாணம்)**

**விஜய், ஜோதிகா, விஜயகுமார்** மற்றும் பலரின் நடிப்பில்

**குஷி**

காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)

(C/13441)

---

**நாகம்ஸ்**
**சுன்னாகம்**

**பிரசாந்த், ரம்பா, லிவிங்ஸ்டன், ராதாரவி** நடித்த

**பூமகள் ஊர்வலம்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

(79597)

---

## திருநாடலங்கரித்த திங்கள் நினைவு



மலர்வு 1978 - 10 - 03

உதிர்வு 2000 - 09 - 18

**செல்வி கிறகரி சேளி சுவேந்தினி**

**செல்வ முகம் மறப்போமா!**

திங்கள் ஒன்று மறைந்ததம்மா எங்கள் அன்புத்
திரவியமே செல்வமுகம் பொன்சிரிப்புப்
பொங்கும் உயர்த் தேன் மொழிகள் மறந்தோமில்லை
பூத்த மலர் மணம் சொரியும் பருவத்தே எம்
மங்களமே மகளே கண்மணியே உன்னை
மனமிருளப் பிரிந்திங்கு தவிக்கின்றோமே!
செங்கமலப் பதத்திறைவன் மடியின் மீதே
சேர்ந்தெமது துயர்தீர வேண்டுவாயே!

*இல.59, மாட்டீன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவின் கொடுந் துயராற்றாத
**பெற்றோரும்,**
**உடன்பிறப்புகளும்,**
**உற்றார், உறவினரும்.**

தகவல்:
கி.டினோ (சகோதரன்)
யோ.கிறகரி

*(மறைந்த எமது மகளின் துயரச் செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றிகள்)*

(79590)

---

## நெஞ்சில் இருந்து நீங்காத 500ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 13 - 12 - 1980

உதிர்வு 12 - 06 - 1999

**அமரர் சோதிநாதன் சோபநாத்**

நீ மறைந்த தவிப்பில் நெஞ்சம் வேகுதடா!
ஐநூறு நாள்கள் ஆகியதென நினைக்கும் போது
நெஞ்சம் நோகுதடா! நீ மலர்ந்த நாள் வசந்தங்கள்
பெருகியதே - ஆனால்
நீ மறைந்த இவ் ஐநூறு நாளும் இனி
வரும் நாளும் எம் வாழ்வில் இனி வசந்தமில்லை!

திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தில் 'கோல்' காத்தாய்
உன்னைக் கண்டதும் பந்து உருளவில்லை!
இப்போ உருண்டு, புரண்டு கண்ணீர் மழை
பொழிகின்றனர் உன் சக நண்பர்கள்

நீ மறைந்தது பொய்யாகாதோ! உன்
உருவத்தை, அழகு வதனத்தை மனக்கண் முன்
நிறுத்திக் கதறும் எங்களுக்கு வடிகால் இல்லையடா!
நீ எம்மை விட்டு மறைந்தது உண்மை என்று
இந் 500 நாளும் வந்ததடா!

என்றும் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

உன் பிரிவால் வாடும்
**தாய், சகோதரர்கள்,**
**உற்றார், உறவினர்.**

(79859)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

**திரு.வீ.பி.செல்வநாதன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகம்மா பரமநாதன்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழக உறுப்பினர்கள்.**

(C/13441)

# இலங்கைத் தேர்தல் தொடர்பாக அமெரிக்கா ஆர்வம் காட்டவில்லை

வாஷிங்டன்,ஒக்.18

இலங்கைத் தேர்தல் தொடர்பாக ஆர்வத்துடனான பிரதிபலிப்பெதுவும் கிளின்ரன் நிர்வாகத்திடம் இருந்து வெளிப்படவில்லை. மாறாக வழமை யான விதத்தில் இலங்கையின் இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என அமெரிக்க வெளி விவகார அமைச்சு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

இலங்கையின் ஐக்கியத்தையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாது காக்கும் அதேசமயம் சகல இலங் கையினரதும் பாதுகாப்பையும் கௌ ரவத்தையும் உறுதிப்படுத்தும வகை யில் பேச்சுமூலம் அரசியல தீர்வைக் கண்டு இனநெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என அமெ ரிக்க வெளிவிவகார அமைச்சு வலி யுறுத்தியுள்ளது.

அதேசமயம் இலங்கையின் ஒரு கோடியே இருபது இலட்சம் வாக் காளர்களில் 75 சதவீதமானோர் வாக்களித்திருப்பதாகவும் இது இலங் கையின் ஜனநாயக நடை முறையின் பாரம்பரியம் என்றும் அந்த அறிக் கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், சில தேர்தல் தொகுதி களில் முறைகேடுகள் இடம்பெற் றுள்ளதாக தேர்தலைக் கண்கா ணித்த இலங்கையிலுள்ள உள்ளூர் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங் கள் தெரிவித்திருந்தமை குறித்து, அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அறிந்துள்ளதாகவும் அதில் குறிப்பி டப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என்று தெரி வித்திருக்கின்ற அதே சமயம் இது தொடர்பாக அமெரிக்காவின் தேசிய ஜனநாயக நிறுவனத்தின அறிக்கைக் காக கிளின்டன் நிர்வாகம காத்திருப் பதாகவும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கை தெரிவித்தது.

இந்த விடயங்கள் குறித்து கிளின்டன் நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவா கருத்துத தெரிவிக் கையில் - அங்கு சில வன் செயல் கள நடைபெற்றுள்ளன. மோசடிகளும் இடம்பெற்றதாக செய்திகள் வெளி யாகியுள்ளன. ஆனால், இவை தொடர்பாக எந்தவிதமான கருத்தை யும் தெரிவிக்கும் நிலைமையில் நாம் இல்லை என்று கூறியுள்ளார். (ஐ-4)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் 20 ஆண்டுகள் விஞ்ஞான, விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற யாழ்.கல்விவலய விஞ்ஞான முதன்மை ஆசிரியர் அ.சோமாஸ்கந்தனின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த 8ஆம் திகதி பழையமாணவர்களால் மேற்படி வித்தியால யத்தில் நடத்தப்பட்டது. பண்டிதர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் அ.சோமாஸ்கந்தனின் சேவைகளைப் பாராட்டி பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம். *(படம்: காரைநர் செய்தியாளர்)*



ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் செல்வன் நாகரத்தினம் மாதவனின் மிருதங்க அரங்கேற்ற வைபவம் அண்மையில் நடை பெற்றது.

மிருதங்கவித்துவான் என்.சின்னராசாவிடம் குருவழிபாடு ஆற்றி செல்வன் மாதவன் மிருதங்கத்தைப் பெறுவதைப் படத்தில் காண லாம். கவிமாமணி வீரமணி ஐயா அருகே காணப்படுகிறர். (ஐ)



கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை எழுதிய சிந்து நடைக் கூத்து நாடக நூல் வெளியீட்டு விழா அண்மையில் நவாலி வை.எம். சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையுரையாற்றுவதை படத்தில் காணலாம். கலாபூஷணம் செல் லத்துரை, கோகிலா மகேந்திரன், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, சோ.பத்மநாதன் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ-90)

*(படம்: மானிப்பாய் செய்தியாளர்)*

## யாழ். நீதிமன்றில் ஐவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.18

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்த 5 சந் தேக நபர்கள் யாழ். நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நவரட்ணம் ஆனந்தராசா (கொடி காமம், கட்டைபறிச்சான் வீதி), சூசைப்பிள்ளை பாலேஸ்வரன் (குரு நகர்), நடராஜா ரஞ்சித்காந்தன் (கல் வியங்காடு), கே.உதயராசா (ஊர்கா வற்றுறை), தங்கராசா ரதீபன் (கொக் குவில் கிழக்கு) ஆகியோரே பிணை யில் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்ன ராஜா சந்தேக நபர்களை 25 ஆயி ரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (ஐ-9)

### வானொலியில் சொற்பொழிவு

திருகோணமலை,ஒக்.18

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் பற்றியும் அங்கு நடைபெற்றுவரும் கேதாரகௌரி விர தம் தொடர்பாகவும் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று இன்று புதன்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் நடைபெறவுள்ளது. திரு. கே.கே.சுப்பிரமணியம் அதில் சொற் பொழிவாற்றுவார். (ஐ-ஒ)

## செம்மணி புதைகுழி வழக்கை இங்கு மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.18

செம்மணி புதைகுழி தொடர்பான வழக்கை கொழும்பிலிருந்து யாழ். நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரி வட பகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் பிரதம நீதியரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ்.மாவட்ட நீதிபதி ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக் கடி தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கில் கொலையா ளிகள் என்று சந்தேகிக்கப்படும் 6 நபர்க ளும்போக்குவரத்து காரணங்களைக் காட்டி தங்கள் சட்டத் தரணிகள் மூலம் மனுச் செய்து கொழும்பு நீதி மன்றுக்கு வழக்கை மாற்றியுள்ளனர்.

இந்த வழக்கின் பெரும்பாலான சாட்சிகள் யாழ்ப்பாணத்தில் இருப் பதால் இவ்வழக்கு விசாரணைகளை மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடத்து மாறு வேண்டுகின்றோம்.

சாட்சிக்காரர்கள் கொழும்புக்கு வருவதற்கு பாதுகாப்பு, போக்குவ ரத்து மற்றும் தங்குமிட வசதிகள் பெறுவதில் சிக்கல்கள், சிரமங்கள் இருப்பதாலும் -

புதைகுழிகள் அமைந்த பிரதே சம் யாழ்.நீதி நிர்வாக எல்லைக்குள் இருப்பதனாலும் வழக்கை இங்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## யாழ். கரையோர மீனவருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வருமானம் இழந்த ஆயிரத்து 971 மீனவக் குடும் பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வுள்ளது.

பாஷையூர் பகுதியில் 346 குடும் பங்களுக்கும், கொழும்புத்துறைப் பகுதியில் 70 குடும்பங்களுக்கும், குருநகர் பகுதியில் ஆயிரத்து 555 குடும்பங்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த வர்கள் எதிர்வரும் 19ஆம் திகதியும் குருநகரைச் சேர்ந்தவர்கள் எதிர் வரும் 23ஆம் திகதியும் யாழ். பிர தேச செயலகத்துடன தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

பதிவுகளை மேற்கொள்ள வரு வோர் குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் 5 ரூபா முத்திரை என்பனவற்றுடன் சமுகம ளிக்குமாறும் -

யாழ்.பிரதேச செயலர் பா.செந் தில்நந்தனன் கேட்டுள்ளார்.

பாஷையூர் பகுதி மீனவருக்கான பதிவுகள் நேற்று நடைபெற இருந் தன. (ஐ-9)

## சங்கானையில் 450 கிராம் பாண் 50 சதம் குறைத்து விற்பனை

யாழ்ப்பாணம், ஒக்.18

சங்கானைப் பகுதியில் 450 கிராம் பாண் நிர்ணய விலையிலும் பார்க்க 50 சதம் குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஏனைய இடங்களில 10 ரூபாவாக இந்தப் பாண் விற்கப்படுகின்ற போதும் சங்கானையில் பாண் உற் பத்தியாளர்கள் விலையைத் தாமா கவே குறைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

அவர்களின் இந்த முடிவை பாவனையாளர்கள் பாராட்டி உள்ள னர்.

கடந்த முதலாம் திகதி தொடக் கம் பாணின் நிறை 350 கிராமில் இருந்து 450 கிராமாக அதிகரிக்கப் பட்டு இதன் உச்சவிலை 10 ரூபா வாக நிர்ணயம் செய்யப்பட்டது தெரிந்ததே.

இதே வேளை -

வடமராட்சிப் பகுதியில் சில இடங்களில் பாணின் நிறையிலோ விலையிலோ மாற்றம் எதுவும் செய் யப்படாமல் பழைய நிறை விலைப் படியே பாண் விற்கப்படுவதாக பாவ னையாளர்கள் முறையிட்டுள்ளனர்.

450 கிராம் பாணைத் தயாரிப்ப தற்குரிய அச்சுக்கள் செய்யப்ப டாமையினாலேயே தொடர்ந்தும் 350 கிராம் பாண் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக உற்பத்தியாளர்கள் தெரி வித்துள்ளனர். (ஐ-5)

### ஐவரைக் கடித்த விசர்நாய்

யாழ்ப்பாணம்,ஒக்.18

சுழிபுரம் பகுதியில் ஒரேநாளில் ஐவரைக் கடித்த விசர்நாய் ஒன்று நாய் ஒன்றையும், ஒரு பூனையையும் கடித்த பின்னர் மரணமானது.

சுழிபுரம் செருக்கப்புலத்தில் இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மகாலிங்கம் தவமணி (வயது 52), மாரிமுத்து புஷ்பராணி (வயது 40), அம்பலம் சிவசூரி (வயது 19), திருச்செல்வம் சாரதா தேவி (வயது 24), விபர்சன் (வயது 18) ஆகிய ஐவருமே விசர்நாயினால் கடியுண்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். (ஐ-15)

## செய்திச் சாரம்

### கோழிக்குஞ்சு உற்பத்தி

யாழ்ப்பாணம்,ஒக்.18

அச்சுவேலி கைத்தொழில்ப் பேட்டையிலுள்ள கோழிப்பண்ணை யில் ஒருவருட காலத்தில் 58 ஆயி ரத்து 200 கோழிக்குஞ்சுகள் உற் பத்தி செய்யப்பட்டுள்ளதாக கால் நடை சுகாதார திணைக்கள வட் டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இங்குள்ள ஆயிரத்து 200 தாயினக்கோழிகளின் உற்பத்திக் காலம் முடிவடைந்துள்ளதால் அவை இறைச்சிக்காக விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (ஐ-5)

### வாகனப் பதிவு வேலைகள் ஆரம்பம்

தேர்தல பணிகளையொட்டி கடந்தவாரம் இடைநிறுத்தப்பட் டிருந்த யாழ்.செயலக மோட்டார் திணைக்கள வாகனப் பதிவு வேலைகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

யாழ்.செயலக பதிவாளர் அலு வலகப்பணிகளும் கடந்த சில நாள்களுக்குப்பின் வழமைபோல் நடைபெற்று வருகின்றன.(ஐ-5-ரி)

### வீரதீரச் செயல்கள் நிகழ்ச்சி

அமரர் சான்டோ எம்.துரைரட் ணத்தின் மாணவரான நா.விஜய மோகன் குழுவினரின் வீரதீரச் செயல்கள் நிகழ்வு மானிப்பாய இந் துக்கல்லூரியில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிறு பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதனும் சிறப்பு விருந் தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மருதனார் மடத்தில் நடைபெ றும் பளுதூக்கல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரி சில்களும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன. (ஐ-5-ரி)

### நிறுத்தல் உபகரணங்களுக்கு முத்திரை

பண்டத்தரிப்பில உள்ள பிர தேசசபை உப அலுவலகத்தில் அளவை, நிறுவை உபகரணங்க ளுக்கு முத்திரையிடும் வேலை கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23, 24, 27ஆம் திகதி களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப 1.30 மணிவரை இப்பணி நடைபெறவுள்ளது. (ஐ-5-ரி)

### தும்பில் இருந்து பொருள் உற்பத்தி

யாழ்ப்பாணம்,ஒக்.18

வேலணை ப.தெ.வ. கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த தும்புத்தொழிற்சாலை தற்பொழுது பனை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 40 கிலோ பனம் தும்பும் 50 கிலோ தென்னம் தும்பும் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திர சாதனங்களைக் கொண்ட இந்தத் தொழிற்சாலையில் தும் பில்இருந்து பிரஸ், கயிறு போன் றவை உற்பத்தி செய்யப்படும் என்று பனை அபிவிருத்திச்சபை வட்டாரங்கள தெரிவித்தன.(ஐ-5-17)

### பளு தூக்கும் போட்டி

மாவட்ட ரீதியான பளுதூக்கல் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மேலதிக அரசாங்க அதி பர் து.வைத்திலிங்கம் தலைமை யில் நடைபெறும் இந்தப்போட்டி யில் பிரதேச செயலர் பிரிவுகளிலி ருந்து விண்ணப்பித்த 50 போட்டி யாளர்கள் கலந்து கொள்ளவுள்ள னர் என்று மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூப சிங்க தெரிவித்துள்ளார். (ஐ-5-ரி)

### பாராட்டு விழா

உடுவில் மான்ஸ் தமிழ்க்கல வன் பாடசாலையின் முன்னாள் அதிபர் பொ.அம்பலவாணருக்கு இன்று பாடசாலையில் தற்போ தைய அதிபர் தலைமையில் பாராட்டுவிழா நடத்தப்படவுள்ளது. (ஐ-10)

## பணயக் கைதியாக இருந்த

# ராஜ்குமாரின் மருமகன் வீரப்பனால் விடுதலை!

பெங்களூர், ஒக்ரோபர் 18

நடிகர் ராஜ்குமாருடன் கடத்தப்யட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த ராஜ்குமாரின் மருமகன் கோவிந்தராஜை சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் விடுவித்தான்.

நடிகர் ராஜ்குமாரை மீட்காமலேயே கோபால், பழ. நெடுமாறன் ஆகியோர் உள்ளிட்ட அரசுத் தூதுக்குழுவினரும் சென்னை திரும்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வீரப்பனால் விடுவிக்கப்பட்ட கோவிந்தராஜ் நேற்று காலை பெங்களூரில் கர்னாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்துப் பேசினார்.

கர்னாடகச் சிறைகளில் வீரப்பனுக்கு உதவியதாக அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவித்தால் மட்டுமே நடிகர் ராஜ்குமார் உட்பட இருவரின் விடுதலையை உறுதிப்படுத்த முடியும் என்றும்—

பணயக் கைதிகளில் ஒருவரான நாகப்பா தப்பி வந்ததால் வீரப்பன் கடும்கோபம் அடைந்திருப்பதாகவும்—

உடல் நலக்குறைவு காரணமாகவே தன்னை விடுவித்ததாகவும் தெரிவித்துள்ள கோவிந்தராஜ்.

அரசுத் தூதர்களின் ஆலோசனை முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையில் காட்டில் இருந்து சென்னை திரும்பிய ''நக்கீரன்'' கோபால், பழ. நெடுமாறன், பேரசிரியர் கல்யாணி, சுகுமாரன் ஆகியோர் நேற்று மாலை தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்கள். ஆனால் சந்திப்புக் குறித்த விவரங்கள் எதுவும் வெளியிடப்படவிலலை.

இந் நிலையில் தடாக்கைதிகளின் விடுதலை தொடர்பான விசாரணைகளை இந்திய உச்ச நீதிமன்றம் நேற்று ஆரம்பித்துள்ளது.

நடிகர்ராஜ்குமார் உட்பட 4 பேரை சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்திச் சென்றிருந்தான்.

அவர்களில் ஒருவர் தம்பி வந்தார். ஒருவர் விடுக்கப்பட்டுள்ளார். தற்போது ராஜ்குமாரும் மற்றொருவரும் வீரப்பனிடம் கைதிகளாகவுள்ளனர்.

## சந்தனமரக் கடத்தல்காரர் மீது பொலீஸார் சுட்டு இருவர் பலி!

### மதுரை அருகே பதற்றம்!!

மதுரை, ஒக். 18

தமிழகத்தின் மதுரையருகே கூடலூர் காட்டுப் பகுதியில் சந்தனமரக் கடத்தல் கும்பல் ஒன்றின்மீது வனக் காவலர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 2 பேர் கொல்லப்பட்டனர்.

காட்டில் சந்தன மரங்களைச் சட்டவிரோதமாக வெட்டிக் கொண்டிருந்த 8 பேர் கொண்ட கும்பல் அப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வனப் பாதுகாவலர்கள் மீது துப்பாக்கிகளால் சுட்டதாகவும்—

வனக் காவலர்கள் திருப்பிச் சுட்டதில் கடத்தல் கும்பலைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததுடன் 6 பேர் தப்பியதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கூடலூரில் சாலை மறியலில் ஈடுபட்டதுடன், அரசுப் பேருந்துகளைத் தாக்கிச் சேதம் விளைவித்ததை அடுத்து அங்கு பதற்றம் நிலவி வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## மேற்குக்கரை அமைதிப்பேச்சு உடன்பாடு ஏற்படாமல் முறிவு

காஸா, ஒக் 18

மேற்குக் கரை மற்றும் காஸாவில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே இடம்பெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை உடன்பாடுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் கை விடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகியவற்றின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மெடலின் அல்பிரைட் தலைமையில் நடத்திய பேச்சுவார்த்தையில் இரு தரப்புகளிடையே பாரிய வேறுபாடுகள் காரணமாக வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரும் உடன்படிக்கை எதுவும் ஏற்படவில்லை.

பேச்சுவார்த்தை குறித்து மெடலின் அல்பிரைட் கருத்துத் தெரிவிக்கையில்,

இணங்கிய விடயங்களை விட இருதரப்பும் கருத்து வேறுபாடு கொண்டுள்ள விடயங்கள் அதிகளவில் இருப்பதாகவும்,

எனவே பேச்சுக்களை மேலும் முன்னெடுப்பதில் அர்த்தம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை

மேற்காசியப் பிரச்சினை தொடர்பாக எகிப்தில் கூடியுள்ள உச்சி மாநாட்டிலும் தெளிவற்ற முரண்பாடான நிலையே நிலவுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அமெரிக்க அதிபர் பில்கிளிங்ரன் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும்வரை எகிப்தில் தங்கியிருக்கத் திர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-8)

## பீஹாரில் நிலத்தகராறால் தொடரும் படுகொலைகள்

### இறந்தவர் எண்ணிக்கை 21 ஆனது

பாட்னா, ஒக். 18

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 4 நாள்களில் இப்பகுதியில் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு திவான் மாவட்டம் பஹிரா கிராமத்தில் வாள்களுடன் நுழைந்த கும்பல் ஒன்று வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5பேரை வெளியே இழுத்து வந்து தலைகளை வெட்டிப் படுகொலை செய்ததாகவும், கொல்லப்பட்டவர்கள் 13 வயதிலிருந்து 90 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

நிலத்தகராறு காரணமாக 4 நாள்களுக்கு முன்னர் நடந்த கொலைகளுக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இது கருதப்படுகின்றத.


### மானிப்பாய் இந்துக் கல்லூரி

### 6 ஆம் ஆண்டு அனுமதி - 2001

புலமைப் பரிசில் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே வழங்கப்படும்.
உடன் விண்ணப்பிக்கவும்.
படிவங்கள் கல்லூரியில் பெறவும்.

முடிவு திகதி: 31-10-2000

- அதிபர்.

(சி/13435)


## அணுகுண்டைப் பயன்படுத்த பாகிஸ்தான் தயங்காது

### பர்வேஷ் முஷாரப் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஒக். 18

பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டால் இந்தியா மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் எச்சரித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு முஷாரப் அளித்த பேட்டியில் இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

தெற்காசியப் பகுதியில் ஆதிக்க மேன்மை பெற்ற நாடுகளிடம் அணு ஆயுதங்கள் உள்ளபோது, பாகிஸ்தான் மட்டும் அணுஆயுதம் இல்லாமல் இருக்க முடியாது என்றும்—

பாதுகாப்புக் கருதித்தான் பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்ததாகவும் பேட்டியில் கூறியுள்ள முஷாரப் —

அணுகுண்டை முதலில் பயன்படுத்த பாகிஸ்தான் விரும்பியதில்லை என்றும்—

அதே சமயம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணுகுண்டைப் பயன்படுத்த பாகிஸ்தான் தயங்காது என்றும் தெரிவித்துள்ளார். (ஒ-8)

## சீனா மீது ஊடுருவல் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக். 18

அருணாசலப் பிரதேசத்தின் திவாவ் பகுதியில் அமைந்துள்ள இந்திய எல்லையில் சீனா ஊடுருவல்களை மேற்கொள்வதாக அருணாசலப் பிரதேச முதல்வர் முகுந்த் மித்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சீன வெளியுறவுச் செயலர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

## தாக்குதல் நிறுத்தத்துக்கு முஜாஹிதீன்கள் நிபந்தனை

ஸ்ரீநகர், ஒக். 18

ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதாக முதலில் இந்தியா அறிவித்தால், தாமும் தீவிரவாத நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதாக ஹிஸ்புல்முஜாஹிதீன் இயக்கத்தின் தலைவர் சையத் சலாவுதீன் தெரிவித்தார்..

தனியார் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனை அவர் கூறினார்

காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா மனப்பூர்வமாக ஆதரவளிக்க விரும்பினால் முதலில் இந்தியா தாக்குதல் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட சலாவுதீன் —

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் முன்னதாக அறிவித்திருந்த யுத்த நிறுத்தத்தை ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் விலக்கிக் கொண்ட போது இயக்கத்தில் கருத்து வேறுபாடால் பிளவு ஏற்பட்டதாகக் கூறப்படுவதை மறுத்தார்.

[ஒ-8]

## நிலச்சரிவில் சிக்கி 13 பேர் பலி

பரீஸ், ஒக். 18

இத்தாலி - பிரான்ஸ் எல்லைப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையினால் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச் சரிவுகளில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

## இராணுவ ஆட்சியாளர் குறித்து நாடாளுமன்ற யூனியன் கவலை!

ஜகார்த்தா, ஒக். 18

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் ராணுவம் அல்லது இதர புரட்சிகள் மூலம் கவிழ்க்கப்படுவது குறித்து நாடாளுமன்றங்களுக்கான யூனியன் கவலை தெரிவித்துள்ளது.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் 116 நாடுகளின் பிரதிநிதிகள்பங்கு பற்றும் நாடாளு மன்றங்களுக்கிடையிலான யூனியனின் மாநாட்டில் தொடக்க உரை ஆற்றிய யூனியனின் தலைவரும், இந்திய நாடாளு மன்றத் துணைத் தலைவருமான நஜ்மா ஹெப்துல்லா மேற்கண்டவாறு கவலை தெரிவித்தார்.

புரட்சி மற்றும் மக்கள் விரோத முயற்சிகளால் ஏற்படுத்தப்படும் ஜனநாயக விரோத ஆட்சிகள் முறையாக வகுக்கப்பட்ட சர்வதேச நெறி முறைகளை மதிப்பதில்லை என்றும் —

இத்தகைய அரசு அமையும் போது அப்பகுதியில் பரவலான பின்விளைவுகளும் பாதிப்புகளும் ஏற்படுவதாகவும் நஜ்மா ஹெப்துல்லா மேலும் கூறினார்.

(ஒ-8)

## ஆட்கொல்லிக் காய்ச்சலுக்கு உகண்டாவில் 50 பேர் பலி!

அம்பாலா, ஒக். 18

உகண்டாவில் வேகமாகப் பரவிவரும் ஆட்கொல்லிக் காய்ச்சலுக்கு இதுவரை ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதுடன் நூற்றுக் கணக்கானோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட உகண்டாவின் குளு பிரதேசத்தில் பரவியுள்ள இந்த ஆட்கொல்லி நோய் எபோலா என்ற வைரஸ் கிருமியால் ஏற்படுவதாகவும் உகண்டாவில் நிலவும் மருத்துவ வசதிக்குறைபாடுகளால் நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மந்தகதியில் நடைபெறுவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டில் எபோலா வைரஸின் செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் —

இந்தக் காய்ச்சலுக்கு தடுப்பூசி இதுவரை உருவாக்கப்படவில்லை என்றும்

கூறியுள்ள மருத்துவர்கள், இந்த நோயால் பீடிக்கப்பட்ட 10 பேரில் 3 பேர் என்ற வீதத்தில் உயிர் பிழைப்பதாகவும் தெரிவித்தனர். (ஒ-8)

## இந்தியாவில் பூமியதிர்ச்சி

இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் நேற்றுக் காலை ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால் கட்டடங்களில்விரிசல்கள்ஏற்பட்டதாகவும், உயிர்ச்சேதங்கள் இல்லை என்றும் கூறப்படுகிறது.

# வடக்கு - கிழக்கை இணைக்க கூடிய தமிழ்த் தலைமைத்துவம் வேண்டும்

## அதன் கீழ் தமிழர்கள் ஒன்றுபடுவது அவசியம்

யாழ்ப்பாணம், ஒக். 18

வடக்கு — கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடிய ஒரு தலைமைத்துவம் உருவாகி அதன் கீழ் தமிழரெல்லாம் ஒன்றுபட்டு உணர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை தற்போதைய தேர்தல் முடிவுகள் வலியுறுத்தி நிற்கின்றன.

இவ்வாறு யாழ். இந்து பழைய மாணவர் சங்கத்தினால் முழுநிலா நாள் நிகழ்வாக நடத்தப்பட்ட 'பொதுத் தேர்தல் முடிவுகள் ஓர் அலசல்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் உரையாற்றிய யாழ்ப்பாணம் ப. நோ.கூ. சங்கத்தலைவர் திரு. சி. வீ. கே.சிவஞானம்தெரிவித்தார்.

யாழ். இந்து பழைய மாணவர் சங்கச் செயலாளர் ந. வித்தியாதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்தரங்கின் இணைப்பாளராக டாக்டர் வை.யோகேஸ்வரன் கடமையாற்றினார்.

சீ.வீ.கே. சிவஞானம் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:—

கள்ளவாக்குப் போடுவதை நிறுத்த வேண்டுமானால் தேர்தல் சட்டத்தினை மாற்ற வேண்டும். நிழற்படத்துடன் கூடிய அடையாள அட்டைத் திட்டத்தை அறிமுகம் செய்வதின் மூலமே இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

### விருப்பு வாக்கு

விருப்பு வாக்கு மூவருக்கு அளிக்கப்படுவதினால் உட்கட்சி பூசல்கள் சில கட்சிகளுக்குள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதுடன் சில கட்சிகளுக்குள் கழுத்தறுப்பு வேலைகளும் நடைபெற்றுள்ளன.

ஒரு கட்சியிலுள்ள வேட்பாளர் இன்னொரு வேட்பாளருடன் விருப்பு வாக்குத் தொடர்பாக தனது ஆதரவாளர் தனக்கும் மற்ற வேட்பாளருக்கும் விருப்பு வாக்குகள் போடுவதற்கு வாக்குறுதி அளித்துவிட்டு அவரின் ஆதரவாளர்களின் வாக்குகளை தனக்கு மட்டும்பெற்று தனது ஆதரவாளரை அந்த வேட்பாளருக்கும் விருப்பு வாக்குப் போடச் செய்யாமல் தனக்கு மட்டுமே விருப்பு வாக்கு போடச் செய்துள்ளார்.

இத்தகைய நிலையினை மாற்றுவதற்குத் தேர்தல் சட்டத்தில்விருப்பு வாக்கு உரிமை ஒருவருக்கு மட்டுமே வழங்கப்பட்டால் பிரச்சினைகள் எழமாட்டாது.

### தமிழ்த் தேசியம்

1952 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் தேசியக் கட்சியான ஐ.தே. கவைச்சேர்ந்த சு. நடேசபிள்ளை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். 1956 ஆம் ஆண்டு இந்த நிலைமாறித் தமிழ்த் தேசியம் வளரத் தொடங்கியதனால் தமிழரசுக் கட்சி சார்பானவர்களும் சுயேட்சைக்குழு உறுப்பினர்களுமே யாழ்ப்பாணத்திலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக்கொண்டாலும் கூட நிந்தாவூர், பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு, கல்குடா, திருகோணமலை, மூதூர் போன்ற தொகுதிகளிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கீழ் தேர்தலில் போட்டியிட்டவர்கள் நாடாளுமன்றம் சென்றுள்ளனர்.

இதன் மூலம் தமிழ்த் தேசியத் தலைமை வடக்கு—கிழக்கில் வியாபித்திருந்தது கவனிக்கப்படத்தக்கது.

> **யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கடந்த வாரம் நடத்திய முழு நிலா நாள் கருத்தரங்கின் தொகுப்பு இது.**

### தலைமை வெற்றிடம்

தற்பொழுது யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை திகாமடுல்ல ஆகிய தொகுதிகளில்இருந்து தமிழ்த் தேசியத்துக்கு உட்பட்டவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாமல் இருப்பது தமிழ்த் தேசியத் தலைமைக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

இது 1952 இல் ஆரம்பிக்கப்பட்ட கௌரவத்துடன் கூடிய சுயாட்சிக் கோரிக்கையின் ஆரம்ப நிலைக்கு முற்பட்ட காலம் வந்துவிட்டதோ என்று கேட்கவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது.

இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழினம் சந்தித்த பெரும் உயிரிழப்பு, அர்ப்பணிப்புகள், தியாகம் போன்றன பெறுமதியற்றதாகி விட்டதா என்ற கேள்வியும் எழுகிறது.

### 2 கட்சிகளுமே பொறுப்பு

திருகோணமலை மாவட்டத்தில் தற்போதைய தேர்தலின்போது தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டதற்கான முழுப் பொறுப்பையும் தமிழர்விடுதலைக் கூட்டணியும் தமிழ்க் காங்கிரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழினத்தின் விடுதலைக்காக, விமோசனத்துக்காகத் தந்தை செல்வா தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளை மறந்து ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் நேரிற் சென்று தமிழினத்துக்காக ஒன்றுபட்டு போராடுவோம் என்று கேட்டுக் கொண்டதற்கு அமைய தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது.

திருகோணமலைத் தொகுதியை 1947 இல் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் எஸ். சிவபாலன் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும் 1952 ஆம் ஆண்டு என். ஆர். இராசவரோதயம் போட்டியிட முன் வந்த பொழுது தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடாமல் இருந்ததால் அங்கு தமிழர் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட்டது.

திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனது தொடர்பாக எவர் எப்படி விளக்கமளித்தாலும் இதனை கோட்டை விட்டதற்கு இந்த இரு கட்சிகளும் தான் பொறுப்பு.

இது தற்போதைய தமிழ்த் தலைமைத்துவத்தின் தூர நோக்கின்மையையும் குறுகிய அரசியல் இலாப சிந்தனையையும் எடுத்துக்காட்டுகிறது.

தந்தை செல்வா போன்ற தீர்க்கதரிசனமிக்க - வடக்கு-கிழக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய - ஒரு தலைமைத்துவம் உருவாக வேண்டும் என்ற தேவையையும் இந்தத் தேர்தல் முடிவுகள் உணர்த்தி நிற்கின்றன.

### ஆட்சி நீடிக்காது

கடந்த வாரத் தேர்தலின் முடிவுகள் மூலம் ஆட்சி அமைக்கும் எந்த அரசும் நீடிக்காது. ஏனென்றால் எதிர்க்கட்சியும் பலம் வாய்ந்த நிலையில் நாடாளுமன்றத்தில் இருக்கப் போவதுடன் கூட்டுச் சேரும் கட்சிகளின் நிபந்தனைகள், கோரிக்கைகள் போன்றவற்றை நிறைவேற்ற முடியாத ஒரு நிலை ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஏற்படலாம். அப்போது பிரச்சினைகள் உருவாகி அரசு குலையவேண்டிய நிலை ஏற்படும்.

யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும் ஆட்சி அமைக்கும் அரசிடமும் எதிர்க்கட்சியிடமும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காச் நோக்கம் எதுவும் இல்லை.

தமிழர்களுக்கு கஷ்டங்களையும் இடப்பெயர்வுகளுக்கான சூழ்நிலைகளையுமே இந்தத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தவுள்ளன.

### அர்த்தமில்லாத் தேர்தல்

இந்தத் தேர்தலில் ஒரு கொள்கை இல்லை. வயிற்றுப் பிழைப்புக்கான, வசதி தேடுவதற்கான தேர்தலே இது. ஜனநாயகம் இல்லை, சுதந்திரம் இல்லை. ஆகவே இது ஓர் அர்த்தமில்லாத தேர்தல்.

இந்தத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் அனைத்தும் நிரந்தர சமாதானம் வேண்டும் எனக் கோரி ஆளுக்கு நூறு வியாக்கியானம் செய்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அலுவலகம் எதுவும் இல்லாமலேயே வெற்றி பெற்றுள்ள தமிழ்க்காங்கிரஸ் கட்சியைப் பாராட்ட வேண்டும்.

### ஐ. தே. க. வெல்லவில்லை

ஐ. தே. கவும் யாழ்ப்பாணத்தில் வெற்றிபெற்றதாகக் கூறுகிறார்கள். நாங்கள் இங்கே ஓர் உண்மையை தெரிந்துகொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஐ தே.க. வெல்லவில்லை. ஒரு தனி மனிதனான தி. மகேஸ்வரனே வெற்றிபெற்றுள்ளார்.

மகேஸ்வரனுக்கு கிடைத்த வாக்குகள் மட்டுமே ஐ தே. கவை வெற்றியடையச் செய்துள்ளன. இந்த முடிவை வைத்துக் கொண்டு நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின் சிங்களத் தேசியக்கட்சியான ஐ. தே. க. யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்று விட்டதாக உலகெங்கும் பிரசாரம் செய்யப்படுகிறது. ஐ. தே. க. தலைவர்கள் எவரும் யாழ்ப்பாணத்துக்கு வராமலே அக் கட்சி வெற்றிபெற்றுள்ளது என்றால் மகேஸ்வரனே அதற்குக் காரணம்.

யாழ். மாவட்டத்தில் ஈ. பி.டி.பி. — 4, தமிழர் விடுதலைக் கூட்டணி — 3, தமிழ்க் காங்கிரஸ் — 1, ஐ. தே. க. —1 என ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

இந்த முடிவுகளின் பின் விளைவுகள் என்ன? மாவட்ட மட்டத்திலான நிர்வாக நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஏற்படும். இது நாள் செல்லத் தான் தெரியவரும்.

திருவாளர்கள் நாகநாதன், அமிர்தலிங்கம், கதிரவேற்பிள்ளை போன்ற பல தலைவர்களின் ஆற்றல்கள் என்ன, சிறப்புகள் எவை என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய தலைமைத்துவத்துக்கு மதிப்பு இருக்க வேண்டும். மற்றவர்களுடைய மதிப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தலைமைத்துவம் தான் அன்று இந்த மண்ணில் இருந்தது. ஆனால் இன்று அது இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது — இப்படி அவர் மேலும் கூறினார்.

### தமிழ்த்தேசியம் மழுங்கடிப்பு

முன்னாள் பத்திரிகையாளரும், தொழில் அதிபருமான திரு. இ. சங்கர் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

1919 ஆம் ஆண்டு சேர் பொன்.அருணாசலம் தமிழ்த் தேசியத்துக்கு வித்திட்டார். அதனை அடியொற்றி ஜீ ஜீ. பொன்னம்பலம் தமிழ்க்காங்கிரஸ் கட்சி வழி தமிழ்த் தேசியத்தை வளர்த்து வந்தார்.

1947 ஆம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் மூலம் தமிழ்த் தேசியம் அறுவடை அடைகின்ற நேரத்தில் அறிவு பூர்வமான வழி நடத்தல் இன்மையால்தமிழ்த் தேசியம் மழுங்கடிக்கப்பட்டது. இதனை அவதானித்த தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார். 1956 களில் தமிழரசு மூலம் தமிழ் தேசியம் ஓரளவு பூத்துக்குலுங்கியது.

1977 ஆம் ஆண்டு தந்தை செல்வா முன்னெடுத்த தமிழ்த்தேசியம் அதி உச்ச அறுவடையைப்பெற்றது. ஆனால் அந்த அறுவடையைப் பார்ப்பதற்கு முன் அவர் அமரர் ஆகிவிட்டார்.

சரியான வழி நடத்தல் இல்லாமல் மீண்டும் 1977 ஆம் ஆண்டு முழுமையாக முகிழ்த்து வந்த தமிழ்த் தேசியம் தன் இலக்கை அடையத் தவறிவிட்டது.

இந்த அரசியல் வரலாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புக்கு ஒரு சிறந்த முன் படிப்பினையாக அமைந்தது.

1994 ஆம் ஆண்டே முஸ்லிம் தேசியத்தின் உச்சப்பயன் பாட்டைப்பெற்ற முஸ்லிம் காங்கிரஸை அதற்கு மேலும் வழி நடத்தி அரசியல் சிதைவுகளைச் சந்திக்க விரும்பாத அஷ்ரப் 2000 ஆம் ஆண்டு

(9 ஆம் பக்கம் பார்க்க)

---

## உதயன்

### அது அவரது தார்மீகப் பொறுப்பு

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் குறித்து தேர்தல் வன்செயல்கள் கண்காணிப்பு நிலையம் வெளியிட்ட இறுதி அறிக்கையில்,தேர்தல் ஆணையாளரையும், ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவையும் வெகுவாகச் சாடியுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்ற வன்செயல்கள் மற்றும் சட்ட மீறல் நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் எடுத்த முடிவுகள் உகந்தவை அல்ல; அவை தேர்தல் சட்டத்துக்கு உட்பட்டவையும் அல்ல என்று கண்காணிப்பு நிலையம் சுட்டிக் காட்டி இருக்கிறது.

வாக்களிப்பு நிலையங்கள் சிலவற்றில் நடைபெற்ற சம்பவங்கள் வாக்காளப் பெருமக்களை அவர்தம் வாக்குரிமையைப் பயன்படுத்தவிடாமல் தடுத்துள்ளன. அவை சம்பந்தமாகத் தேர்தல் ஆணையாளர் எடுத்த நடவடிக்கைகள் நியாயமற்றவை. அது மட்டுமன்றி தேர்தல் ஆணையாளர் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்தவும் தவறிவிட்டார் — என்றவாறு கண்காணிப்பு நிலையம் குற்றம் சாட்டியுள்ளது.

பொதுத் தேர்தலில் வாக்களிப்பு சுமார் 80 சதவீதமாக இருப்பதனால் தேர்தல் வன்செயல்களை ஒரு பொருட்டாகக் கவனத்தில் எடுக்க வேண்டியதில்லை — என்று ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர் குழு தெரிவித்த கருத்தையும் உள்நாட்டுக் கண்காணிப்பு நிலையம்கண்டித்துள்ளது.

மேற்படி நிலையம் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளும் தகவல்களும்,நாடளாவிய ரீதியில் தேர்தல் நீதியான முறையில், மக்களின் வாக்களிக்கும் உரிமைகளைப்பேணும் வகையில் நடைபெற்றதா என்ற சந்தேகத்தைத்தோற்றுவிக்கின்றன. இது மிகவும் பாரதூரமான விடயம்.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் அறிக்கையோ, வாக்கெடுப்புத் தொடர்பான நடவடிக்கைகள் முறையாகவும் திறமையாகவும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை, மேற்படி கண்காணிப்புக்குழு தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தங்கள் சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையிலேயே செயற்பட்டனர் என்பதனையே தனது அறிக்கையில் கண்டித்திருக்கிறது.

வெளியில் இருந்து வந்தவர்களின் பார்வைக்கும் உள்நாட்டுக் கண்காணிப்பு நிலையத்தின் பார்வைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. அறிக்கைகளில் முரண்பாடுகளும் உள்ளன.

எப்படியோ, குற்றச்சாட்டுக்கள், கண்டனங்களை உதாசீனம் செய்யாமல், அவற்றைக் கருத்தில் எடுத்து, தேர்தல் நியாயமாகவும் நீதியாகவுமே நடைபெற்றது என்பதனை எடுத்துச் சொல்ல வேண்டிய — பகிங்கரங்கப்படுத்த வேண்டிய — கடமை தேர்தல் ஆணையாளருக்கு உண்டு.

சட்டப்பிரகாரம் தேர்தல் ஆணையாளருக்கு அந்தக் கடமை இல்லையென்றால் கூட,ஜனநாயக நலன் நாடிய தார்மிகப் பொறுப்பு அவருக்கு உண்டு. அவ்வாறுசெய்யவில்லை எனின், தமிழர்களில் பெரும்பான்மையினரைப் போலவே, சிங்கள மக்களுக்கும் வாக்குரிமையில் நம்பிக்கை இல்லாமற் போகலாம்!

---

### நாளை

ஐப்பசி 3

வியாழக்கிழமை

திதி: ஷஷ்டி

காலை 6-12 வரை.

ஸப்தமி

பின்னிரவு 3. 51 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

பிற்பகல்: 4. 43 வரை.

சுபநேரம்: 7.32— 9 02

ராகுகாலம்: 1.32—3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

### உதயவாக்கு

வெளிப் பார்வைக்குக் கேவலமாக உள்ளதும் ஆனால் உட்புறத்திலே அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசை தான் ஆண்டவன் குடியேறி வசிப்பதற்கு ஏற்றதொரு மாளிகை.

— இங்கர்சால் —

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்ற வீதியில் கடையும் கல்வீடும் உடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: திருமதி பரமேஸ்வரி சிவபாதம், நீதிமன்ற வீதி, மல்லாகம். (79531)

## விற்பனைக்கு

26ஸ்ரீ தொடர் இலக்க இசுசு லொறி விற்பனைக்கு உண்டு. முகவரி: பெரிய தம்பிரான் கோயிலடி, தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (79534)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 ஆம் ஆண்டு பிறந்த, அத்தம் 4 ஆம் பாதம் செவ்வாய்க்குற்றமுள்ள, சொந்த வியாபார ஸ்தாபனத்தை நடத்தும் படித்த, உயர்குணம்மிக்க, மணமகனுக்கு பெற்றோர் கல்வி அறிவுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1116, C/o உதயன். (79508)

## மணமகன் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த 42 வயது பூரட்டாதி, **Accounts Clerk** பெண்ணுக்கும், 41 வயது **Staff Nurse** பெண்ணுக்கும் தகுந்த வரன்களை எதிர்பார்க்கின்றோம். மணமாகாத, விவாகரத்துப் பெற்ற தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். முழு விவரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். விளம்பர இல.1112, மே/பா உதயன். (79275)

## உடன் விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய பெரிய கண்ணாடியிலான சோக்கேஸ், றாக்கைகள், கவுண்டர் மேசை, அலுவலக பாவனைக்குரிய இரும்பு மேசை மற்றும் வேறு பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: யுரேனியம் மாளிகை, கனகசபை வீதி, சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாய். (79541)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியைச் சேர்ந்த

| | புள்ளி | மாவட்டநிலை |
|---|---|---|
| **செல்வி சற்குணராசா பாமினி** | - **169** | **38** |
| **செல்வி இராஜேஸ்வரசர்மா பார்க்கவி** | - **164** | |
| **செல்வன் சதானந்தன் பிரதாபன்** | - **145** | |

ஆகியோரைப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியமையை இட்டு வாழ்த்துகின்றோம்.

**காந்திஜி சனசமூக நிலையம்**

*வட்டுக்கோட்டை.* (79570)

# வாழ்த்துகின்றோம்

சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2000**

செல்வன் **வி. வின்ஜக்ஷன்** 152 புள்ளிகள்

இவரைக் கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு பல்கலையும் கற்று வாழ வாழ்த்துவதோடு அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

**தாத்தா குடும்பத்துடன்**
**பெரியப்பா,**
**பெரியம்மா,** } ஜேர்மனி
**கபூர் அண்ணா**

*பு.காசிப்பிள்ளைப்பத்தர்,*
*488/1, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (79569)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

***HAPPY BIRTHDAY***

18-10-2000



# செல்வி ஜேனுகா சிவகுமாரன்

கணேஸ்வரம் அளவெட்டியைச் சேர்ந்த

**சிவகுமாரன் - புஸ்பலதா தம்பதிகளின்**

*செல்வப் புதல்வி* **ஜேனுகா** அவர்கள்

இன்று (18-10-2000) புதன்கிழமை தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். ஜேனுகாவை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பா, பெரியம்மா, ராணி அன்ரி, சித்தி, சித்தப்பா, தம்பி, அண்ணாமார், அக்காமார், அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், டோகாவில் வசிக்கும் பெரியம்மா, பஹ்ரைனில் வசிக்கும் ஆசை அப்பா, ஆசையம்மா, ஜேர்மனியில் வசிக்கும் மாமா, அத்தை, மச்சான் தனுஸ், டென்மார்க்கில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா, கிளி அன்ரா மற்றும் உற்றார், உறவினர் யாவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

**அன்பு அப்பா**
**க. சிவகுமாரன்**

***கணேஸ்வரம், அளவெட்டி.*** (79539)

# கிராம அலுவலர்களைச் சந்திக்க வசதி

தென்மராட்சி, ஒக்.18

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் தங்கியுள்ள மக்கள் தமது பிரிவு கிராம அலுவலர்களை அந்தந்த பிரதேசங்களில் திங்கள் வெள்ளி ஆகிய தினங்களில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதி திங்கட்கிழமைகளில் வலிகாமம் பகுதியில் தங்கி உள்ள கிராம அலுவலர்களை இணுவிலில் இயங்கும் பிரதேச செயலகத்திலும், வடமராட்சி பகுதியில் தங்கியுள்ள கிராம அலுவலர்களை நெல்லியடியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்திலும் -

பிரதி வெள்ளிக்கிழமைகளில் வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள கிராம அலுவலர்களை நெல்லியடியில் இயங்கும் உப அலுவலகத்திலும் -

வடமராட்சியில் தங்கியுள்ள கிராம அலுவலர்களை இணுவிலில் இயங்கும் பிரதேச செயலகத்திலும் பொதுமக்கள் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-117)

# ஓய்வூதியர் ஏமாற்றம்

தென்மராட்சி, ஒக்.18

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் செப்ரெம்பர், ஒக்ரோபர் ஆகிய மாதங்களுக்குரிய வவுச்சர்கள் கடந்த வாரம் ஓய்வூதியர்களுக்குக் கிடைத்துள்ள போதிலும் இக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகளும் பட்டியல்களும் வங்கிகளுக்கு வந்து சேராததால் நேற்று முன்தினம் ஓய்வூதியம் பெறச் சென்ற ஓய்வூதியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (ஐ-117)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**புவனேந்திரன் - லதா தம்பதிகளின்**

**அன்புச் செல்வன்**



**செல்வன் நிவேஜிதன்** புள்ளி **154**

**பெற்றமைக்காக அவரை வாழ்த்துவதுடன் அவரின் கல்விக்கு, வழிகாட்டியாக விளங்கிய யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், வகுப்பாசிரியை திருமதி தவராணி அவர்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியை செல்வி கலைவாணி அவர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

***பெரியப்பா, பெரியம்மா,***
***அண்ணாமார்.***

***25, சிவகுருநாதர் வீதி,***
***யாழ்ப்பாணம்.*** (79565)

# The Barbara Mulvaney Computer Training Center

**123, Temple Road, Jaffna**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

## ☞ Diploma Courses

- *Diploma in Microsoft Office* - *(5 Months)*
- *Diploma in Desktop Publishing* - *(5 Months)*
- *Diploma in Photo Graphics* - *(3 Months)*
- *Diplama in Information Technology* - *(5 Months)*
- *Diploma in Kids courses* - *(3 Months)*

## ☞ Certificate Courses

- *Microsoft Word*
- *Microsoft Excel*
- *Microsoft Access*
- *Microsoft Power point*
- *Windows Operating System*
- *Adobe Page Maker 6.5*
- *Auto CAD 2000*
- *Microsoft Publisher 98*
- *Microsoft Visual Basic 6.0*
- *Corel DRAW 9.0*

இப்பிரிவானது சிறு குழுக்களாக நடைபெறவுள்ளதால் அலுவலக உத்தியோகத்தர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ளலாம்

## ☞ Desktop Publishing

*Publishing* சம்பந்தமான அனைத்து வேலைகளும் செய்து கொடுக்கப்படும் (*Lazer Printing, Colour Printing, Stencil Cutting, Colour Separation, Photo designing work, Digital Images*)

## ☞ Play House

மேற்படி வகுப்புகள் யாவும் 23.10.2000 அன்று ஆரம்பமாக இருப்பதால் உங்கள் பதிவுகளை 22.10.2000 முன் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

நிர்வாகம

# மாகாண மட்ட ஆங்கிலப்போட்டியில்
# யாழ். மாவட்டத்துக்கு 31 இடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அண்மையில் திருகோணமலையில் நடத்தப்பட்ட மாகாண மட்ட ஆங்கிலமொழி அறிவுப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 31 இடங்கள் கிடைத்துள்ளன.

மேற்படி 31 இடங்களும் எழுத்துப் போட்டிகளுக்கே கிடைத்துள்ளன. இவற்றில் யாழ். கல்வி வலயத்துக்கு 17 இடங்களும், வடமராட்சி கல்வி வலயத்துக்கு 7 இடங்களும், வலிகாமம் கல்வி வலயத்துக்கு 5 இடங்களும், தென்மராட்சி கல்வி வலயத்துக்கு 2 இடங்களும் கிடைத்துள்ளன.

இவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் யாழ். கல்வி வலயத்தில் உள்ளன. இவை விரைவில் ஏனைய வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

### பார்த்தெழுதல்

★ ஆண்டு 3 — முதலாம் இடம்: எம். சிந்துஜா (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை)

★ ஆண்டு 4 — முதலாம் இடம்: ரி, ஹம்சாலினி (நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை), மூன்றாம் இடம்: பி. தனுஷா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

★ ஆண்டு 5 — முதலாம் இடம்: என். ஜெசிக்கா (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), மூன்றாம் இடம்: ஜி. பவித்திரா (சென். ஜோன் பொஸ்கோ)

★ ஆண்டு 6 —இரண்டாம் இடம்:- ஆர். அபித்தா (உடுவில் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்:-எஸ். ஆரண்யா (வேம்படி மகளிர் கல்லூரி),

★ ஆண்டு 7 — மூன்றாம் இடம்:- கே. லக்சிதா (வேம்படி மகளிர் கல்லூரி).

★ ஆண்டு 8 — முதலாம் இடம்:- ஏ. ஜசிந்தா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), இரண்டாம் இடம்:- ஜி. தர்சிகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி),

★ ஆண்டு 9 — முதலாம் இடம்:- ஆர். கீர்த்தனா (வடமராட்சி மகளிர் கல்லூரி], இரண்டாம் இடம்:- எஸ். சங்கரி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), மூன்றாம் இடம்;- ஏ. மைதிலி (வேம்படி மகளிர் கல்லூரி),

★ ஆண்டு 10 — இரண்டாம் இடம்:- எம். தர்மினி (யாழ்ப்பாணக் கல்லூரி)., மூன்றாம் இடம்:- எம். கலாரூபன் (யாழ். இந்துக் கல்லூரி),

★ ஆண்டு 12 — முதலாம் இடம்:- ஜே. ஜே. றெஜிமான் (சென். பற்றிக்ஸ் கல்லூரி),

### சொல்வதெழுதல்

★ ஆண்டு 7 —இரண்டாம் இடம்:- என். விநோசன் யாழ். இந்துக்கல்லூரி),

★ ஆண்டு 8— இரண்டாம் இடம்:- ரி. காயத்திரி (உடுவில் மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்:- ஏ. அன்ரனி ஜெசிந்தா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை).

★ ஆண்டு 9 — முதலாம் இடம்:- கே. கஜந்தா (உடுவில் பெண்கள் கல்லூரி), மூன்றாம் இடம்:- எஸ். உமாஜினி (வடமராட்சி மகளிர் கல்லூரி).

★ ஆண்டு 10—இரண்டாம் இடம்:- கே. குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்:- வி. கௌசல்யா (கொக்குவில்இந்துக்கல்லூரி).

★ ஆண்டு 11 — முதலாம் இடம்:-எம். கௌசிகா (வேம்படி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்:- எஸ். அபிராமி (யாழ்ப்பாணக் கல்லூரி).

### கட்டுரை எழுதல்

★ ஆண்டு 6 — மூன்றாம் இடம்:- எஸ். நிரோசிகா (வேம்படி மகளிர் கல்லூரி).

★ ஆண்டு 8 — மூன்றாம் இடம்:- ரி ஏ. றொசாந்தி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி),

★ ஆண்டு 10 — இரண்டாம் இடம்:- கே. குருபரன் (யாழ். இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்:- வி. கௌசல்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

★ ஆண்டு 11 — இரண்டாம் இடம்:- எம்.கௌசிகா (வேம்படி மகளிர் கல்லூரி),

★ ஆண்டு 13 — மூன்றாம் இடம்:-கே. சுமங்கலை(வேம்படிமகளிர்கல்லூரி).(ஐ-10-ரி)


## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
## தரம் 6 க்கான அனுமதி-2001

2001 ஆண்டிலே தரம் 6 கற்கத் தகுதியுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்லூரியில் பெறப்படும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எமக்குக் கிடைக்கச் செய்யவேண்டிய கடைசித் திகதி 15—11—2000 ஆகும்.

– அதிபர்

(சி/ 13436)

## தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
## பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் - 2000

மேற்படி கல்லூரியின் 2001 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் 29-09-2000 திகதிய அரச வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சி நெறிகளுக்கான எமது கல்லூரி விண்ணப்பங்கள் 25—11—2000 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருவதுடன் இது சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

– அதிபர்

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
16—10—2000 (சி/ 13432)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி - 2000
தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி - 2000

## முதலாம்/ இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சைக்குத் தகுதி வாய்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 28-10-2000 திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50 வீதம் பல்கலைக்கழகமக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது நிதியாளர் யாழ். பல்கலைக்கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

க. க. அருள்வேல்
இணைப்பாளர்.
தொழிலாளர் கல்வி அலகு
யாழ். பல்கலைக்கழகம்
–பதிவாளர்.

(சி/13434)


## கண்ணீர் அஞ்சலி

### செல்வி நுதர்சினி நடராசா (தர்ஷா)

அவர்கள் 04 - 09 - 2000 அன்று அகால மரணம் அடைந்ததையிட்டு அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்குப் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

தர்ஷாவின் பிரிவால் துயருறும்:
**B. A, Part - 1 மாணவர்கள்.**

(79546)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா தம்பிஐயா

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா தம்பிஐயா காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் தம்பிஐயாவின் அருமை மனைவியும், மகேஸ்வரி, Dr. நடராசா, மனோன்மணி, மங்கையற்கரசி, பாலயோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் சரவணமுத்து, அமிர்தலிங்கம், சிவனேசன், ராணி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 - 10—2000 அன்று மாத்தளையில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. த. நடராசா

11, Gongawela Rd.
Matala. (79573)

## செபஸ்டியான் பேர்க்மன் சபாநாயகம்

ஏழாலை தெற்கு, சூராவத்தையைப் பிறப்பிடமாகவும், 33, கண்டி வீதி, சுண்டுக்குளியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய செபஸ்டியான் பேர்க்மன் சபாநாயகம் (இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளர், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவகம், ஜெர்மன் பாஷை போதனாசிரியர்) 16-10-2000 இரவு 8 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்டியான் (முன்னாள் ரயில் நிலைய அதிபர்) றோசலின் தம்பதிகளின் அன்பு மகனும், ஜோசப் மனுவேற்பிள்ளை-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஆனந்தராணியின் அன்புக் கணவரும், நிரஞ்சனின் (றூடி-லண்டன்) பாசமிகு தந்தையாரும், ஜெசியின் அன்பு மாமனாரும், ராகுல், மிரில்லா ஆகியோரின் அன்புப் பேரனும், பேரின்பநாயகம் (லண்டன்), கருணைநாயகம், (கனடா), விஜயநாயகம் (லண்டன்), மல்லிகா(அவுஸ்திரேலியா), ஜெயசீலன் (லண்டன்), செல்வநாயகம் (லண்டன்), தயாளன் (லண்டன்), விமலநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பராஜா, காலஞ்சென்ற புஸ்பராணி, ஆனந்தராஜா, அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற அருந்தவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 33, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (18 - 10 - 2000) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஏழாலை, சூராவத்தை இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 3 மணிக்கு ஏழாலை தெற்கு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

33, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (79578)

## செபஸ்தியாம்பிள்ளை மரியநாயகம்

ஓய்வு பெற்ற காணி அபிவிருத்தி இலாகா ஓவசியர்)

மாதகலைச் சேர்ந்தவரும், தற்பொழுது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய செபஸ்தியாம்பிள்ளை மரியநாயகம் 15-10-2000 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற எலிசபெத்தின் [செல்லம்மா] அன்புக் கணவரும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை – தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை — இயக்கினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சாளற் (கொழும்பு), ரயிற்ரஸ் (மாதகல்), வைலற் [D I.T. ஸ்ரீலங்கா ரெலிக்கொம், கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், யேசுதாசன் ஓய்வு பெற்ற பொலீஸ் இன்ஸ்பெக்ரர்], இராசகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசநாயகம்[ஓய்வு பெற்ற ஆசிரியர்], ஜேம்ஸ் [ஓய்வு பெற்ற மதுவரி உத்தியோகத்தர்], காலஞ்சென்றவர்களான செல்லப்பாக்கியம், இம்மனுவல் [முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்], அருளப்பு [முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்], தோமஸ் [முன்னாள் மதுவரி உத்தியோகத்தர்] ஆகியோரின் சகோதரரும், கிரிஷாந்தினி [ஜேர்மனி], றெஜினோல்ட் [விஞ்ஞான பீட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்], நிரோசன், சுபிலஸ், ஜக்சிக்கா, புறூட்டஸ், வேறுட்சான்ரஸ், கீர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ம. ரயிற்றஸ்
(மகன்)

மாதகல்,
T.P. 070 212513 (79566)

## உடன் விற்பனைக்கு

6 K W. மின்சார இயந்திரம், லீஸ்ரர் மற்றும் ஐஸ்கிறீம் தயாரிக்கும் கொம்பிறசர் பாத்துடன் உடன் விற்பனைக்கு உண்டு.

காலை 10 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

ப. விக்கினராசா (ராசா)
No. 23, கேசாவில் பிள்ளையார் கோயில் றோட்,
(நாச்சிமார் கோயிலடி)
வண்ணார்பண்ணை.

(79533)



14- 10- 2000 அன்று

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய

ஆதிமூல ஸ்ரீ லக்ஷ்மி நாராயண

அமுத சுரபி அன்னதான மட

கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட

அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு:- 1528 2 ஆம் பரிசு:- 16
3 ஆம் பரிசு:- 1058

10 ஆறுதல் பரிசுகள்:-

5486 4421 2107 1195
1516 5314 1196 1217
5402 3033

வை. ஆனந்தராசா
தலைவர்

(சி/13420)



யா/ மானிப்பாய்

## மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2000 ஆம் ஆண்டில் தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில்

சித்தியடைந்த பின்வரும் மாணவர்களையும்

S. துசந்தன் — 175 B. யாழினி — 167
P. சபேசன் — 152 J. றதீசன் — 149
V. சுயந்தினி — 143 S. தினேஸ் — 140

மிகவும் ஊக்கமுடன் அயராது உழைத்து பெருமை சேர்த்த ஆசிரியையான

செல்வி அனுஷா ஜெயசிங்கம்

அவர்களையும் சகல ஊக்குவிப்புக்களையும் திறம்பட அளித்த அதிபரையும் கனிஷ்ட அதிபராகக் கல்வி யூட்டலில் ஏனைய ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்களையும் பாராட்டி எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(79551) — பெற்றோர்கள்.



யாழ்ப்பாணம் மாநகரசபை

## அவசர கேள்வி கோரல்

### கட்டட மணல் விநியோகம் 100 கியூப்

பின்வரும் மணல் வகைகளில் 100 கியூப் மணலை உடனடியாக விநியோகிக்கக்கூடிய விநியோகத்தர்களிடம் இருந்து கேள்வி கோரப்படுகிறது.

இவற்றுக்கான கூறுவிலைகள் யாவும் 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரை இடப்பட்ட பதிவுத்தபால் மூலம் மாநகரசபை பிரதம கணக்காளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் 25-10-2000 ஆந் திகதி பி. ப. 2. 00 மணிக்கு முன்னர் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் பி. ப 2. 30 மணிக்குத் திறக்கப்படும். எனவே கேள்விக்காரர் கேள்வி திறக்கப்படும்போது தவறாது சமுகமளிக்கவும்.

குறிப்பு: 100 கியூப் மண்ணையும் இரு வார காலத்தில் விநியோகிக்கக் கூடியவர்கள் மட்டும் தயவுசெய்து கேள்வியைச் சமர்ப்பிக்கவும்.

| | | |
|---|---|---|
| 01. | அரியாலை மணல். | — 01 கியூப் |
| 02. | வரணி மணல் | — 01 கியூப் |
| 03. | கச்சாய் மணல் | — 01 கியூப் |
| 04. | ஆனைக்கோட்டை மணல் | — 01 கியூப் |
| 05. | மண்கும்பான் மணல் | — 01 கியூப் |

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(கி/13422)


## மதில் இடிந்து இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 18

புத்தூர்ப் பகுதியில் மதில் இடிந்து விழுந்ததில் அதற்குள் அகப்பட்டு இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார்.

நவக்கிரி, புத்தூரைச் சேர்ந்த ஜெயரட்ணம் சிறிகாந்தன் (வயது 16) என்ற இளைஞரே வலது கால் முறிந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தோட்டப்பகுதியில் அமைந்திருந்த உயரமான சிமெந்துக் கட்டின்மீது ஏற முற்பட்ட சமயம் அந்தச் சுவர் இடிந்து இவரின்மீது விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-10-ரி)

## உரிமை கோராத சடலம்

நெல்லியடி, ஒக். 18

மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் கடந்தஞாயிறு அன்று வைத்தியசாலையில் மரணமானார்.

கரவெட்டி மேற்கு பகுதியிலிருந்து அப்பகுதி கிராம சேவை அலுவலரினால் கடந்த 12 ஆம் திகதி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த க. பொன்னுத்துரை (வயது 45) என்பவரே இவ்விதம் மரணமானவராவார்.

இவரது சடலத்துக்கு உறவினர் எவரும் உரிமை கோராதமையினால் சடலம் அன்று காலை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேல்பிள்ளை தெரிவித்தார். (இ-109)

## கணனிக் கல்வி ஆலோசகர் நியமனம்

யாழ். கல்வி வலயத்தில் கணனிக் கல்விக்கான ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியின் பின் 5 வருட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிமனையின் விளம்பரப் பலகையில் பார்வையிடுவதுடன் விண்ணப்பப்படிவங்களை யாழ் வலயக் கல்விப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)


சிமெந்துக் கூரை ஓடுகள்

(LMCRS)

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை

(இணுவில்)

ஜீ.ரி.சற், அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைப்புச் செய்யப்படும் வீட்டுத் திட்டங்கள், பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றிற்கு பயன்படும் சிமெந்துக்கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு.

இயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் கொங்கிறீற் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையும் விற்பனை நிலையமும்:

லோகேஸ்
கூரை ஓட்டுத்
தொழிற்சாலை,
இணுவில்.

(79572)



## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மேற்கு, நாவலடி ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியும், நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு;

ச. குனேந்திரன்,
இல. 10, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

(79585)



யா/ இணுவில் இந்துக் கல்லூரி

## நூலக விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும்

காலம்: 18 - 10 - 2000 புதன்கிழமை
காலை 10.00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

தலைவர்: திரு. க. கனகராசா
(கல்லூரி முதல்வர்)

பிரதம விருந்தினர்: திருமிகு வி. இராசையா
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)

சிறப்பு விருந்தினர்: திருமிகு அ. நற்பரானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவிற் கோட்டம்)

கௌரவ விருந்தினர்: திருமிகு மா. இராமதாசன்
(பொறியியலாளர்)
(பணிப்பாளர், யுரோவில் நிறுவனம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்.

இணுவில். (79587)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பி
கோசலா அவர்களின்
அன்புத் தாயார்

### அரியநாயகம் தையல்நாகேஸ்வரி

(தாதியர் உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

99 உயிரியல் பிரிவு
நண்பிகள்.

(79583)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17 — 04 — 1923



உதிர்வு: 25 — 10 — 1994

### அமரர் R. D. மயில்வாகனம்

(பொடித்தம்பி)

(Retired Valuation Inspector)

திதி:- 18 - 10 - 2000

ஆண்டுகள் தான் ஆறு ஆனதே!
அப்பா! உங்கள் அன்பு மொழிகள்
எம்நெஞ்சை விட்டு அகலவில்லை. என்றும்
உங்கள் அன்பு முகம் எம்மனதை விட்டகலா!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி:- ம. நாகேஸ்வரி

பிள்ளைகள்:- குகதாசன், வசந்தா, சண்முகநாதன், சாரதா, யோகதாசன், கிருஷ்ணதாசன்

மருமக்கள்:- சத்தியதேவி, தெய்வேந்திரன், ஜெயக்குமார், சிவரூபி, கிருஷாந்தி,

பேரப்பிள்ளைகள்:- சுதர்ஷன், சுலக்ஷன், பிரியதர்ஷினி, நிரோஷன், ரதுஸ்விமலினி, விசாலினி, பிரசாந்தன், செந்தூரன், ஷோந்தி,

சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

'நவிண்டில்',
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(79582)

## வடக்கு - கிழக்கு யுத்தத்தை ஊக்குவிக்கும்

# அவசரகாலச் சட்டம் உட்பட சகல சட்டங்களையும் எதிர்க்க கூட்டணி, ரெலோ, காங்கிரஸ் கட்சிகள் முடிவு

கொழும்பு,ஒக்.18

பதினொராவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இன்று பதவியேற்கவிருக்கும் மூன்று தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு - கிழக்கு யுத்தத்தை ஊக்குவிக்கும் அவசரகாலச் சட்டம் உட்பட சகல சட்டங்களையும் எதிர்ப்பதென முடிவு செய்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் -

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த (ரெலோ) மூன்று உறுப்பினர்களும் -

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் - ஆகியோரே இந்த ஒன்பது உறுப்பினர்களும் ஆவர்.

நாடாளுமன்றத்தில் எவ்வாறு செயற்படப் போகிறோம் என்பது குறித்து அந்தக் கட்சிகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி கருத்து வெளியிடுகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ தாம் ஒரு போதும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று கூறினார்.

தமிழர்களுக்கெதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் துணைபோகும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களிப்போம். அதேசமயம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் எதிர்த்துக் குரல் கொடுப்போம் என்றும் அவர் சொன்னார்.

ரெலோ அமைப்பின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில் -

"சில அற்ப சலுகைகளுக்காக எமது மக்களின் உரிமைகளை ஒரு போதும் விலைபேசி வயிறு வளர்க்க மாட்டோம். அதேசமயம் தமிழர் தாயகத்தில் யுத்தப் பேரழிவுகளை உண்டு பண்ணி எமது மக்களை அழித்தொழித்துக் கொண்டிருக்கும் கொடூர யுத்தத்தை முன்னெடுப்பதற்கான அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து எதிர்ப்போம்" - என்றார்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் போர் நடவடிக்கைகளை முன்னெடுத்துக்கொண்டு, மறுபுறம் தெற்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் குரல் எழுப்புவோம் என்றும் அவர் சொன்னார்.

அவசரகாலச் சட்டம் உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக செயற்படவுள்ளோம் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

(இ-3-4)

# சிப்பாய் ஒருவர் தற்கொலை

யாழ்ப்பாணம், ஒக்.18

தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவித்து, இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு, கோப்பாய் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டது.

516ஆவது பிரிக்கேட் பிரிவைச் சேர்ந்த இராணுவச்சிப்பாயான எச்.பி. எஸ்.மதுசங்க(வயது 25) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

சடலம் நேற்று அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லும் பொருட்டு படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இராணுவத்தை விட்டு தப்பியோடிய இவர் விசேட பொலீஸ் பிரிவினால் கைது செய்யப்பட்டு மூன்று நாள்களுக்கு முன்னர் தான் போர்முனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார் என்று பொலீஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடத்துமாறு யாழ்.நீதிமன்றம் கோப்பாய் பொலீஸாருக்கு உத்தரவிட்டது.

(இ-139-15-5-8)

## தீபாவளியை முன்னிட்டு

# விடுமுறை தினங்களிலும் கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.18

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கடந்த 14ஆம் திகதி முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை சகல சனி,ஞாயிறு தினங்களிலும், அரசவிடுமுறை தினங்களிலும் சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிப்பதென யாழ்ப்பாண வணிகர் கழகம் முடிவு செய்துள்ளது.

அவ்வாறு திறந்து வியாபாரம் செய்யும் வர்த்தக நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் என்றும் கழகத்தின் கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

# வீடு பார்க்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கிப் பலி!

## அரியாலையில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

அரியாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றைய தினம் மிதிவெடியில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நெடுங்குளம் - கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னராசா (வயது 60) என்பவரே இறந்தவராவார்.

நேற்று பிற்பகல் 4.30மணியளவில் பொலீஸாரால் இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

தனது மகனுடன் வீடு பார்க்கச் சென்ற வேளை மிதிவெடியில் சிக்குண்ட நிலையில் நிலத்தில் வீழ்ந்த போது மற்றொரு மிதிவெடி வெடித்ததில் இவர் பலியானதாக தெரியவருகிறது.

சடலம் போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

இம் மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு பதில் நீதிவான் திருமதிஎஸ்.இளங்கோவனை யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பணித்துள்ளார்.

(இ-139-15-10-5-சி)

# லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக்.18

நடைபெற்று முடிந்த தேர்தலின் போது மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி லிப்டன் சதுக்கத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமும், சுதந்திரமான, நீதியான தேர்தலுக்கான இயக்கமும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன.

* தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டோருக்கு எதிராகப் பொலிஸாரும், தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

* தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கமாட்டேன் எனக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இறுதிவரை அதனைக் காப்பாற்றவேண்டும்.

* சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிடையில் மேற்படி கோரிக்கைகளை வற்புறுத்தி பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் போராட்டம் ஒன்றும் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

கையெழுத்துப் போராட்டம் நாடு பூராகவும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## கொடிகாமம் சந்தையில் வியாபாரம்

தென்மராட்சி,ஒக்.18

கொடிகாமம் நகர்ப்பகுதி மீண்டும் வழமை நிலைக்குத் திரும்புகிறது.

இப்பகுதியில் இடம்பெற்ற ஷெல் வீச்சுகள் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்ததையடுத்து வர்த்தக நிலையங்கள், சந்தை அனைத்தும் மூடப்பட்டு செயலிழந்தன.

கடந்த ஒரு வாரமாக ஷெல் வீச்சுத் தணிந்துள்ளதால் தென்மராட்சி கிழக்கு பகுதியிலிருந்து இன்னமும் இடம் பெயராத மக்கள் கொடிகாமம் சந்தையில் வியாபாரத்தினை ஆரம்பித்தனர். இதன்பின் நகர்ப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களும், கொடிகாமம் ப.நோ.கூ. சங்கத்தின் இரண்டு கிளைக் கடைகளும் இயங்கத் தொடங்கியுள்ளன. இதனால் நகரப்பகுதி வழமைக்குத் திரும்பியுள்ளது. (ஐ.117)

## கருத்தரங்கு

கோப்பாய்,ஒக்.18

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்தவுள்ள இக்கருத்தரங்கில் கலைப்பீட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும்,துணைவேந்தர், கலைப்பீடாதிபதி ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவர். (ஐ-72)

## வடக்கு-......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைக் கலைத்து தேசிய ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

இதன் மூலம் முஸ்லிம்களை இலங்கைத் தேசியத்துக்குள் உள்வாங்கச் செய்துவிட்டார்.

தமிழ்த் தேசியத்தின் அறுவடையை முழுமையாக அனுபவிக்காது தந்தை செல்வா அமரரானார். அஷ்ரப் இஸ்லாமிய தேசியத்தினை அனுபவிக்க முடியாது காலமானார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதனால் அங்கு கடந்த வாரத் தேர்தலில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைத்தது.

திருகோணமலையில் ஒரு தமிழர் பிரதிநிதியைப் பெறுவதற்காக ஆயிரத்து 500 வாக்குகள் மட்டுமே தேவையாக இருந்த போதிலும் எந்த தமிழ்க் கட்சியினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படாத காரணத்தினால் தமிழரின் தலைநகரான திருகோணமலையில் தமிழரின் பிரதிநிதியை இந்த தேர்தலில் பெற முடியவில்லை.

1975ஆம் ஆண்டு தமிழர்களின் ஒரே அமைப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய தமிழ்க் கட்சிகளில் ஒன்றாக தன்னை மாற்றிக் கொண்டுள்ளது.

இது வேதனை தரக்கூடிய ஒன்றாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது - என்று திரு. சங்கர் தெரிவித்தார். *

# கண்ணீர் அஞ்சலி

எமது தாதிய உத்தியோகத்தர்

திருமதி

## தையல்நாகேஸ்வரி அரியநாயகம்

அவர்கள் 16.10.2000 அன்று காலமாகியதையிட்டு துயரமுறும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா.அ.பொ.வை.தா.உ.
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்

(79592)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் இராஜசேகரம்

(முன்னாள் பணிப்பாளர்,சுகாதார அமைச்சு, கொழும்பு)

புலோலி மேற்கு, கந்த உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த மயில்வாகனம் இராஜசேகரம் கொழும்பில் நேற்று (17.10.2000)அகால மரணமானார்.

அன்னார் மகேஸ்வரி இராஜசேகரம் அவர்களின் அன்புக் கணவரும், சந்திரசேகர் (பொறியியலாளர்,கனடா), ஞானசேகர் (கால்நடை வைத்தியர், கா.உ.சு.திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெயசேகர்(துபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
இ.ஞானசேகர்(மகன்)
கால்நடை வைத்தியர்
கா.உ.சு.திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(79588)

## திருமதி நல்லம்மா செல்லையா

யாழ்ப்பாணம், மருதடி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லையா(ஸ்தாபகர்,சன்லையிற் றைக்கிளீனர்ஸ் )அவர்களின் அன்பு மனைவி நல்லம்மா 17.10.2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சிவனேசன்,சிவயோகம்,சிவனடியான்,சிவநாதன், சிவதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நேசமலர்,மகாலிங்கம், யோகேஸ்வரி , மல்லிகாதேவி ஆகியோரின் மாமியாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2000) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
சிவநாதன் (மகன்)
சன்லையிற் றைக்கிளீனர்ஸ்,
யாழ்ப்பாணம்.

30/2, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(79589)

## திருமதி சுரேஸ் மகாலட்சுமி

செட்டிகுளத்தைப் பிறப்பிடமாகவும், 22/5, மாரிஅம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுரேஸ் மகாலட்சுமி நேற்று (17.10.2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேஸ் அவர்களின் அன்பு மனைவியும், பவிநாத்தின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும்,கணேசலிங்கம், அன்னபூரணி, கமலாம்பிகை, திலகவதி, சத்தியபாமா, சந்திரலேகா, சர்வேஸ்வரன், சர்வேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்,சந்திரபவானி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேந்திரன் ,சுதர்சன், குமரேசன், சுகி, காலஞ்சென்ற சத்தியநாதன் ஆகியோரின் மைத்துனியும் சர்வநாயகி, பவன், கபிலன், விஜய்,காயத்திரி,சுவஸ்திகா,வினோத்,மிதுஷியா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-10-2000)புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு காலை 11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
க.சின்னம்மா(அம்மா)
சகோதரர்கள்.

22/5, மாரிஅம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(79600)

## இராசேந்திரம் குமணன்

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசேந்திரம் குமணன் 17-10-2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்புமகனும் இந்திராகாந்தி(ஜேர்மனி), மணிவண்ணன் (பிராந்தியக் கணக்கீட்டு அலுவலகம்),கமலினி, இளங்கோவன்(தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும் சபேசன்(ஜேர்மனி), கலாமதி, சத்தியசீலன்(நீர்ப்பாசனப் பகுதி, மாநகரசபை), நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-10-2000) புதன்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மணிவண்ணன்
(தபால் திணைக்களம்)

சின்னக்குளம்,
கந்தையா வீதி,
கந்தரோடை.

(79599)

## கணபதிப்பிள்ளை சின்னராசா

(புல்கை சின்னராசா)

அரியாலை, நாவலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சின்னராசா அவர்கள் நேற்று (17.10.2000) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2000) புதன்கிழமை அன்னாரது தற்போதைய இல்லத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவதாஸ்குணம் குடும்பத்தினர்.

24/2, றக்கா வீதி,
கச்சேரியடி.

(C/13447)

# இலங்கைக்கான தனது உதவிகளை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தும்

கொழும்பு,ஒக்.18

கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்ற நாடாளுமன்ற தேர்தல் நீதி, நியாயமாக நடத்தப்படாததால் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத துமாறு ஐரோப்பிய ஒன்றியம் தனது அங்கத்துவ நாடுகளை கோர உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காக இலங்கை வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தேர்தல் தொடர்பான இறுதி அறிக்கையை தமது தலைமையகத்தில் சமர்ப்பித்துள்ளனர் என்றும் -

இலங்கையில் நீதி, நியாயமான தேர்தல் நடத்தப்படவில்லையாதலால் அந்த நாட்டுக்கான நிதியுதவிகளை நிறுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளனர் என்றும் -

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு உதவிகள் நிறுத்தப்படும் வாய்ப்பு உள்ளது என்று அவர் அங்கு மேலும் சொன்னார். (இ-3)

## வீடுகளைப் பார்த்து வர அனுமதி

யாழ்ப்பாணம்.ஒக்.18

கொழும்புத்துறை கிழக்கு, மத்தி மற்றும் ஆனந்தன்வடலி வீதிப் பகுதிகளுக்கு சென்று தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு நேற்று பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இப்பகுதிகளிலுள்ள மக்கள் நேற்று தமது வீடுகளைப் பார்வையிட்டதுடன் அங்கிருந்து பொருள்களையும் எடுத்து வந்தனர் (இ-5)

## அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

நேற்று நள்ளிரவுவரை அடிக்கடி ரணிலுக்கும், ஹக்கீமுக்கும் இடையில் தொலைபேசி ஊடான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

அதேசமயம் - ஐ.தே.கட்சியின் குழு ஒன்று ஈ.பி.டி.பியினரின் தலைவர்களுடனும் நேற்றுப் பேச்சுக்கள் நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் தனித் தனியாகப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அதே சமயம் ஐ.தே.க. மாற்று அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபடாது மற்றொரு தேர்தலுக்கான வாய்ப்பை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என்று ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் தலைமைப் பீடத்தை கோரி வருகின்றனர்.(இ-3)


MOBILE NET COMPUTER SERVICES MCS

**MCS இன் புலமைப்பரிசில் திட்டம்**

மேற்படி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் சனிக்கிழமை (21.10.2000) நடைபெறவுள்ளதால் மேற்படி திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பரீட்சையில் தோற்றத்தவறியவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணத்தில் அனுமதி வழங்கப்படவுள்ளதால் இவர்களும் பதிவுகளை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக மேற்கொள்ளவும்.

Director
MCS
324, Palaly Road,
Jaffna.

(79584)


## கரம் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.புளூறிபன் பொழுது போக்குக் கழகத்தின் ஏற்பாட்டில் தீபாவளியை ஒட்டிய வருடாந்த கரம் சுற்றுப்போட்டி இன்று புதன்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது என்று அதன செயலாளர் தெரிவித்தார். (இ-3)

## தேசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். அவர் விதிக்கும் நிபந்தனைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றுவது கஷ்டம் என உணர்ந்த ஜனாதிபதி, ஜனாபா பேரியல் அஷ்ரப்பை நேற்றுமுன்தினம் அவரது இல்லம் சென்று பேச்சு நடத்தினார்.

அதன் விளைவாகவே, தேசிய ஐக்கிய முன்னணி நேற்று இரண்டாகப் பிளவுண்டது.

ஜனாபா பேரியல் அஷ்ரப்பின் அறிவுறுத்தலின் பேரில் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 7 எம்.பிக்கள் ஜனாப் யு.எல்.எம்.மொகிதீன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் கூடினர்.

பிரஸ்தாப கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதுமாலெப்பை முகம்மது ஹனிபா (மருதூர்க்கனி), ரிஸ்வி சின்னலெப்பை, எஸ்.கே.என்.மசூர், விமலவீர திஸநாயக்க, மொகிதீன் அப்துல்காதர் ஆகியோர் பங்குபற்றினர்.

கூட்டத்தைத் தொடர்ந்து, அதில் கலந்துகொண்ட தேசிய ஐக்கிய முன்னணியின் தவிசாளர் எம்.ஐ. உதுமாலெப்பை அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாகவும் -

அமைச்சர் பதவி மற்றும் பதவிகளை வழங்குமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் கோரிக்கை எதனையும் முன்வைப்பதில்லை என்றும் -

அரசு விரும்பித் தந்தால் மட்டும் பதவிகளை ஏற்கலாம் என்றும் -

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஹக்கீம் தலைமையிலான அணியினர் நேற்று இரவு கூடி தமது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்தனர்.

தமது அணியில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்றும் -

தாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக எழுத்து மூலமான உடன்பாடு ஒன்று ஏற்படாவிட்டால் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாரில்லை என்றும் - அந்த அணியைச் சேர்ந்த ஒருவர் கலந்துரையாடலின் பின்னர் செய்தி ஏஜென்சி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (அ-3)

## நகரில் புலிகளின் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம 18ஆம் திகதி படையினருடன் இடம் பெற்ற இருவேறு நேரடி மோதல் சம்பவங்களில் உயிரிழந்த இருவருக்கு அஞ்சலி செலுத்தி விடுதலைப்புலிகள் துண்டுப்பிரசுரம் ஒன்றை நேற்று நகரில் விநியோகித்தனர்.

ஊரெழுவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த மேஜர் சபேசன், கரவெட்டியில் உயிரிழந்த மேஜர் தமிழினியன் ஆகியோரின் நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுவதையொட்டியே இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-3)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு.ஒக்.18

யாழ்ப்பாணம் கல்வி வலய கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு

### 16 வயதுப் பிரிவு

* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

* இடைக்காடு மகா வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம். (இ-86)

## ஜோசப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறியே மேற்படி அமைப்பு ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதேவேளை நேற்றுக்காலை வர்த்தக நிலையங்கள் பல திறக்கப்பட்டிருந்தன என்றும் - தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் உறுப்பினர்கள் அங்கு வந்து வர்த்தக நிலையங்களை மூடுமாறு நிர்ப்பந்தித்தனர் என்றும்- அதனை அடுத்தே வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன என்றும்- மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7-21)

## பொ.ஐ.மு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறி, ஹரேந்திர கொரியா, ரிஸ்வி சின்னலெப்பை.

**ஐ.தே.கட்சி**

கே.என்.சொக்ஸி, ஏ.எச்.எம்.அஸ்வர், பிலிந்த மொரகொட, தஹம் விமலசேன , கணபதி கனகராஜ், அப்துல் மஜித், எம்.எஸ்.செல்லச்சாமி, பி.பி.தேவராஜ், ரவீந்திர ரந்தெனிய, திலக் மாரப்பன, நிஹால் பக்மீவெவ, ஸ்ரீநாத் டி மெல்.

**ஜே.வி.பி.**

அனுர குமார திசநாயக்க, ஏ.ஆர்.அன்ஜான் உம்மா.

**தே.ஐ.மு.**

பசீர் சேகு தாவூத்.

**சிஹல உறுமய**

திலக் மஹேந்திர ஜயதிலக கருணாரத்ன. (இ-3)


**இன்றைய வீடியோ CD வெளியீடு**

* நினைவெல்லாம் நீ
* பாரதி

**மூர்த்தி வீடியோ**
**மானிப்பாய்** (C/13444)

**எமது புதிய வீடியோ CD வெளியீடு**

விக்னேஸ், லிவிங்ஸ்டன் நடிக்கும்

* நினைவெல்வாம் நீ
ஒறிஜினல் CD வெளியீடு

*பட்ஜட் பத்மநாபன்

**வீடியோ விமல்**
**யாழ்ப்பாணம்** (C/13445)


# குருநகர் உணவுக் களஞ்சிய ஆவணம் நீதிமன்றப் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம்.ஒக்.18

குருநகர் அரச களஞ்சியத்தில் கடந்த ஜுன் மாதம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கில் களஞ்சியப் பொறுப்பாளரினால் நேற்று நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட களஞ்சியப் பொருள்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் பொறுப்பேற்று பதிவாளரின் தனிப்பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணையின்போது குருநகர் களஞ்சியப் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதன், யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் ஆகியோர் நீதிமன்றில் நேற்று பிரசன்னமாகியிருந்தனர்.

களஞ்சியப்பொறுப்பாளர் தனது வாக்குமூலத்தில், 1995ஆம் ஆண்டு முதல் இந்தக் களஞ்சியத்தில் சங்கிலித் தொடராக ஏற்பட்டிருந்த பொருள் சோர்வுகளையும் கடந்த ஜுன் 2ஆம் திகதி திருட்டுப்போன பொருள்களுடன் சேர்த்துக் கொண்டதாக ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து இது குறித்த தொடர் விசாரணை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை திட்டப் பணிப்பாளரும் யாழ்.அரசாங்க அதிபரும் அனுமதிக்கக் கூடாது என்றும் இது விடயமாக அறிக்கையை எதிர்வரும் 23ஆம்திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் - நீதிவான் உத்தரவிட்டார். (இ-5)

## வாக்காளர் தாக்கப்பட்டு காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் தமக்குள்ள ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி, தாம் விரும்பிய கட்சிக்கு வாக்களித்த பொதுமகன் ஒருவர் தேர்தலில் போட்டியிட்ட கட்சி ஒன்றின் உறுப்பினர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

பலமாகத் தாக்கப்பட்டுக் காயமடைந்த அந்த வாக்காளர் நேற்று முன்தினம் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகிறார்.

காரைநகரில் நடைபெற்ற மேற்படி அரசியல் வன்முறையில் அதே ஊரைச்சேர்ந்த அல்லின் வீதி வாசியான முருகேசு தியாகராசா (வயது 52) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர்கள் இவரை வீட்டிலிருந்து கூட்டிச் சென்றே கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இவரைப்போல வேறு சிலரும் இதே கட்சியினரால் கடந்த சில நாள்களில் தாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(அ-15-139)

## சிஹல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதம் குறித்து மாறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ள போதும் அவசர காலசட்டத்தை நீடிப்பதை எமது கட்சி ஆதரிக்கும் என்று அவர் சொன்னார்.

இராணுவ நடவடிக்கை மூலமே வடக்கில் விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முடியும். அரசாங்கத்திடம் நியாயமற்ற கோரிக்கைகளை விடுத்து வரும் அரசுக்கு ஆதரவான சிறுபான்மைக்கட்சிகள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார். (இ-8)

## சாந்தி, சமாதானம் கோரி விசேட பூசை

புதிய நாடாளுமன்றம் கூடும் வேளை நாட்டில் சாந்தியும், சமாதானமும் மலர வேண்டுமெனக் கோரி இன்று காலை வழக்கம்பரை முத்து மாரியம்மன் ஆலயத்தில் விசேட பூசைகள், அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான ந.திரிலோகநாதனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பணிகள் தொடர இறையருள் வேண்டி வழிபாடு நடத்தப்படும் எனவும்- தெரிவிக்கப்பட்டது.

## எழுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைக் கோரியிருந்தார்.

எனினும் அந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்படவில்லை. அதன் பலாபலனை ஆட்சியின் இறுதிக் காலத்தில் எமது கட்சி அனுபவிக்க நேர்ந்தது.

எனவே இந்த நிலைமை இம்முறை ஏற்படாமல் தடுப்பதற்காக எழுத்துமூலமான உடன்படிக்கை எட்டப்பட வேண்டும்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக ஜனாதிபதி மற்றும் சிரேஷ்ட அரச தலைவர்களிடம் பிரஸ்தாபித்தோம். அது குறித்து ஆராய்ந்து முடிவு அறிவிப்பதாகக் கூறப்பட்டது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


**மணி தொலைத்தொடர்பு நிலையம்**

சம்பியன் லேன், கொக்குவில்.
(கே.கே.எஸ். வீதிப் பக்கத்திலிருந்து 3ஆம் வீடு)

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செய்திகள் உடன் அறிவிக்கப்படும்.

(79602) T.P No. 021-3281

**SUNIL ARTS - சுனில் ஆட்ஸ்**

03. 10. 2000 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

24.10.2000 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பப்படும்.

சுனில் ஆட்ஸ்
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/13442)

**SALE! SALE!! SALE!!!**

பண்டிகை நாள்களை முன்னிட்டு......

**மாபெரும் மலிவு விற்பனை**

சகல விதமான

* றெடிமேட் ஆடைகள் * சாறிகள்
* சூட்டிங் சேட்டிங் * துணிகள்

அனைத்துத் தெரிவுகளுக்கும், மிகவும் குறிப்பிடத்தக்க மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர்களே......

★ இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

**நியூ அசோகன்ஸ்**

152, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(மினிபஸ் தரிப்பு நிலைய பக்கம்)
(79577)

**சிங்கர் கொம்ளெக்ஸ்**

எம்மிடம்:-

* கறுப்பு, வெள்ளைத் தையல் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

* சகலவிதமான தையல் இயந்திரங்களும் உடனுக்குடன் திருத்திக்கொடுக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சிங்கர் கொம்ளெக்ஸ்
மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகில்,
சுன்னாகம்.
(79598)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.